www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net



www.tamilarangam.net



எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே, இன்று மாவீரர்நாள்.

எமது தேசத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த இலட்சிய வேங்கைகளை நாம் இதயக் கோயிலில் வைத்து நினைவுகூரும் புனித நாள். எமது மாவீரர்கள் இந்த மண்ணுக்காக மடிந்தார்கள். இந்த மண்ணின் விடிவிற்காக மடிந்தார்கள். எமது மண்ணில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்ற இலட்சியத்திற்காக மடிந்தார்கள். எமது மண் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண். எமது மூதாதையோரின் பாதச்சுவடுகள் பதிந்த மண். எமது பண்பாடும் வரலாறும் வேர் பதிந்து நிற்கும் மண் எமக்கே சொந்தமாக வேண்டும் என்ற குறிக்கோளுக்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். அந்நிய ஆதிக்க விலங்குகளால் கட்டுண்டு கிடக்கும் எமது தாயக மண்ணை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமைபெற்ற சுதந்திர தேசமாக உருவாக்கும் இலட்சியத்திற்காக எமது மாவீர்கள் மடிந்தார்கள். எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் புனிதப் போரில் எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் மகத்தானவை. அவற்றைச் சொற்களால் செதுக்கிவிட முடியாது. உலக வரலாற்றில் எங்குமே, என்றுமே நிகழாத அற்புதங்கள் இந்த மண்ணில், இந்த மண்ணிற்காக நிகழ்ந்திருக்கின்றன. அந்த வீரகாவியத்தைப் படைத்த ஆயிரமாயிரம் மாவீரரின் இலட்சியக் கனவு, அவர்களது ஆன்மீக தாகம் என்றோ ஒருநாள் நிறைவுபெறுவது திண்ணம்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின்
மாவீரர்நாள் உரையிலிருந்து...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழினத்திற்கு விடிவைத்தரும் தியாக தீபங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏறத்தாழ பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் இன்னுயிரை ஈந்து மாவீரர்களாக மாறி கல்லறைகளுக்குள்ளே துயிலுகின்றார்கள். இன்னும் பலர் அன்னையின் மடியில் உறங்குகிறார்கள்.

நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழீழ மக்கள் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள். ஏறத்தாழ இந்த எண்ணிக்கைக்கு சமமானவர்கள் தங்களின் அங்கங்களைப் பறிகொடுத்திருக்கிறார்கள்.

தாயக மண்ணிலிருந்து பதினைந்து இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த மண்ணைவிட்டு வெளியேறி எல்லாவற்றையும் இழந்த நிலையில் அகதிகளாக உலக நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். தொன்மை மிக்க தமிழினத்தின் நெடிய வரலாற்றில் இத்தகைய தியாகமும் வீரமும் நிறைந்த போராட்டம் நடைபெற்றதே இல்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரமாயிரம் இளைஞர்களும், யுவதிகளும் இரத்தம் சிந்தியும் உயிரை ஈந்தும் நடத்திவருகிற இந்தப் போராட்டம் தமிழின வரலாற்றில் ஈடு இணை இல்லாத ஒரு போராட்டம் ஆகும்.

ஒரு தலைமுறையை சேர்ந்தவர்கள் புரியும் தியாகம் அந்த இனத்தைச் சேர்ந்த பல தலைமுறையினரை வாழையடி வாழையாக வாழ வைக்கும்.

ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இழைக்கும் தவறு அந்த இனத்தைச் சேர்ந்த பல தலைமுறையினரை பல்வேறு துயரங்களுக்கும் இழப்புக்களுக்கும் ஆளாக்கும்.

உலக வரலாறு கற்பிக்கும் உன்னதமான பாடம் இது. முன்னதற்கு உதாரணம் தமிழீழம். பின்னதற்கு எடுத்துக்காட்டு தமிழகம்.

வியட்நாம் மக்களின் மாபெரும் தலைவர் ஹோசிமின் அவர்கள் தலைமையில் நடத்திய விடுதலைப் போராட்டம் இந்த நூற்றாண்டில் உலகைச் சிலிர்க்க வைத்த போராட்டமாகும். இந்த தலைமுறையைச் சேர்ந்த வியட்நாமிய மக்கள் அளப்பரிய தியாகங்கள் செய்ததின் மூலம் தங்கள் மண்ணை மீட்டார்கள். இப்போது தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். எதிர்காலத் தலைமுறை ஏற்றமுடன் வாழ்வதற்கான அடித்தளத்தினை அமைத்துவிட்டார்கள்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் ஜேர்மனியும், இத்தாலியும் வீறுகொண்டு எழுந்தன. இத்தாலியில் முசோலினியும், ஜேர்மனியில் ஹிட்லரும் தத்தமது நாட்டினை எழுச்சிபெற வைத்தது உண்மைதான். ஆனாலும் உலகையெல்லாம் அடக்கியாள வேண்டுமென்ற மண்ணாசை வெறியை தங்கள் மக்களுக்கு ஊட்டினார்கள். அதன் விளைவாக உலகம் பெரும் போரில் சிக்குண்டது. நாகரிக முதிர்ச்சி கொண்ட ஐரோப்பாவில் பல நாடுகள் அழிந்தன. பல இன மக்கள் சொல்லொணா இழப்புகளுக்கும் துயரங்களுக்கும் ஆளானார்கள். ஜேர்மனியும், இத்தாலியும் சுடுகாடுகளாக ஆயின. ஹிட்லரும் முசோலினியும் ஊட்டிய வெறிக்கு இரையாகிய தங்கள் இன அழிவுக்கே காரணமான அம்மக்கள் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக அனுபவித்த துயரங்கள் வரலாற்றில் அழிக்க முடியாத களங்கங்களாகத் திகழ்கின்றன. ஹிட்லரின் தலைமையில் ஒரு தலைமுறையினர் செய்த தவறு பல தலைமுறை ஜேர்மனியர்களைப் பாதித்துவிட்டது. அரை நூற்றாண்டுகால பெருமுயசிக்குப் பின்னர் ஜேர்மனி மீண்டும் எழுந்து நிற்கிறது. ஆனால் இத்தாலியோ எழுந்துநிற்க முடியாமல் தடுமாறுகிறது.

தமிழீழத்தில் இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் செய்து வரும் தியாகம் ஈழத் தமிழர்களுக்கு விடிவைத் தேடி வருவது மட்டுமல்ல உலகத்தமிழ் இனத்திற்கே விடிவைத் தேடித் தரப்போகிறது.

தமிழீழத்தில் ஒவ்வொரு அங்குல மண்ணையும் எதிரியிடமிருந்து மீட்பதற்கு புலிகள் தங்கள் உயிரை அர்ப்பணிக்கிறார்கள். விடுதலைப் புலிகள் சிந்திய குருதியில் ஈழமண் சிவந்துள்ளது. வங்கக்கடல் செங்கடலாக மாறி வருகிறது. இந்த மகத்தான போராட்டத்தின் விளைவாக ஒரு சிறந்த அற்புதமான தலைமை பிரபாகரன் வடிவில் உருவாகியுள்ளது.

தமிழ் நாட்டிலும் உலகில் தமிழர் வாழும் பல்வேறு நாடுகளிலும் பல தலைவர்கள் தமிழர்கள் நடுவில் தோன்றியுள்ளார்கள். ஆனால் உலகத் தமிழினத்தின் உண்மையான தலைவராக யாரும் உருவாகவில்லை. இப்போது அந்தக் குறை நீங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் விளைவாக முக்கியமான இரண்டு நன்மைகள் விளைந்துள்ளன. விடுதலைப் புலிகளின் குருதி சிந்திய மண்ணில் பூத்த மலர்கள் இவைகள்:

1. உலகெங்கும் பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடக்கும் உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்கு தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டி அவர்களை விழித்தெழ வைத்துள்ளது.

2. ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி உலகத் தமிழர்களை வழிநடத்தும் உன்னதமான தலைமை பிரபாகரன் வடிவில் உருவாகியுள்ளது.

மேற்கண்ட இரண்டு உண்மைகள் காலத்தால் அழிக்கமுடியாத கல்வெட்டுகளாகிவிட்டன.

மாவீரர்களின் மகத்தான தியாகத்தால் தமிழீழம் விரைவில் மலரும் என்பதில் ஐயமில்லை!

மலரப்போகும் தமிழீழம் உலகத் தமிழினத்தின் விடிவுக்காகக் குரல் கொடுக்கபோகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. உலகத் தமிழர்களுக்கு தலைமை தாங்கப்போகும் பிரபாகரன் அவர்களின் சீரிய தலைமை குறைந்தபட்சம் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குன்றாத இளமையுடன் மங்காத வலிமையுடன் அறிவாற்றல் திறமையுடன் வழிகாட்டி உலகத் தமிழினத்தை உயர்வடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

**- பழ. நெடுமாறன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர்களது உணர்வுகளும் நினைவுகளுமே எமக்கு வழிகாட்டிகள்

ஒரு இனத்தின் இருப்பு அதன் பாதுகாப்பில் உறுதி செய்யப்படுகின்றது. உலக வரலாற்றை நாம் பார்க்கும்போது, ஒரு இனத்தை இன்னுமோர் இனம் ஆளுமைக்குட்படுத்த முனையும்போது, அங்கே போர் இடம்பெற்றுள்ளது. இவற்றை நாம் வரலாற்றில் படித்திருக்கிறோம். இனங்களின் வரலாறுகள், அவ் இனங்களில் இருந்து தோற்றம் பெற்ற மாவீரர்களின் இரத்தத்தாலும் அர்ப்பணிப்பாலும் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் வாழ்ந்த வாழ்வு மற்றவர்கட்கு முன்னுதாரணமாக அமைந்தது. களத்தில் முன்நின்று போராடி எதிரியை அழித்த வரலாற்றின் உதாரணபுருசர்கள் இவர்கள்.

கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக ஈழத்தமிழனித்தின் வரலாறு இருண்டதாகவும் அந்நிய ஆளுகைக்குட்பட்டதாகவும் இருந்துள்ளது. ஈழத் தமிழ் மக்களும் அடிமைகளாக, இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்ந்தது மட்டுமல்லாது தமது பிரதேசங்களை இழந்து வாழ்விழந்தவர்களாக தாய்நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் எமது இனத்தைத் தலைமை தாங்கியவர்களிடம் நீண்டகால அரசியல் சிந்தனையும் ஆளுமையும் இருக்கவில்லை. அதனால் அந்நிய அடக்குமுறைகளிலிருந்து எம்மை விடுவிக்க, எம்மைப் பாதுகாத்துக்கொள்ள தயாராக இருக்கவில்லை; தயார்ப்படுத்தப்படவில்லை. பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வீரவரலாற்றை நினைவில் நிறுத்த எம்மிடம் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக நினைவுச்சின்னங்களோ, நிகழ்வுகளோ இருக்கவில்லை.

தற்போதுதான், அரசியல், இராணுவ ஆளுமையுள்ள தலைமை எம் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளது. நாம் இன்று எம்மை விடுவிக்க தர்மப் போரினை அந்நிய சிங்கள இராணுவத்துடன் நடாத்திக்கொண்டிருக்கிறோம். இந்தப் போரில் நாம் வெற்றிபெறப் போவது உறுதி. நாம் விடுதலை அடையப் போவது உறுதி. கடந்த நூற்றாண்டுகளில் நாம் இழந்துவிட்ட சுதந்திரத்தை பெறப்போகும் எமது தலைமுறை அடுத்து வரும் எமது சந்ததியையும் பாதுகாப்புடன் வாழவைக்க வேண்டியது வரலாற்றுக் கடமையாகின்றது. தொலைந்து போன இறைமையை மீளப் பெறும் நாம் அதை நிரந்தரமாகக் காப்பாற்ற வேண்டிய கடமை மிகப்பெரியதாகும்.

இன்றைய தலைமுறையும் எதிர்காலச் சந்ததியும் பாதுகாப்புடன் வாழவேண்டிய சூழ்நிலையினை தோற்றுவிக்க வேண்டியது எமது கடமையாகின்றது. இவ் உணர்வுகளை, இவ் உணர்வுகளால் தோற்றம்பெற்ற மாவீரர்களின் நினைவுகளால்தான் உறுதிப்படுத்தப்படுகின்றது. இவர்களின் செயல்கள்தான் எமது வரலாற்று அத்தியாயத்தின் தலைப்புக்களாகும்.

சுதந்திர உணர்வுகளுடன் கிளர்ந்தெழுந்து எதிரியுடன் போராடி, தமது உதிரத்தாலும் உயிராலும் எமது பாதுகாப்பை நிலைநிறுத்தியவர்களின், உணர்வுகளும் நினைவுகளுமே எமக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. இம் மாவீரர்களின் நினைவுக் கற்கள் எமது தேசத்தின் அத்திவாரக் கற்களாகின்றது. இவர்களின் உறுதி எம்மை நெறிப்படுத்துகின்றது. களத்தில் இவர்கள் காட்டிய வீரம் எம்மைப் பலப்படுத்துகின்றது. இவர்களின் இலட்சியம் எமது வெற்றியாகின்றது. உறுதிமிக்க எம் தலைவரின் வழிகாட்டலில் எமது தேசம் விடுதலை பெறும்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டு வாசகங்களும் ஒரு தேசியக் கொடியும்



இன்றைய ஈழத்தமிழினத்தின் வரலாறு மாவீர மணிகளால் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கலையழகு நிறைந்த மாவீரரின் மேன்மையை மேலும் சிறப்பாக உணர்ந்து கொள்ள, மாவீரர் உருவாக்கத்தில் தலைமைச் சிற்பியாக நிற்கும் தலைவர் பிரபாகரனின் அசாதாரண திறமைகளைப்பற்றி மேலும் பல புதிய பதிவுகள் உலகின் முன் வரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவருடைய சிறுபராயம் பற்றியும்; அண்மைக்காலச் சாதனைகள் பற்றியும் மேலும் மேலும் அறிந்துகொள்ள உலகம் ஆவல்கொள்வது இயல்பு. பாடசாலை நாட்களிலேயே அவர் ஓவியம் வரைவதில் மிகுந்த நாட்டமுடையவராக இருந்தார். ஓவியப்பாடமானால் அவர் கையில் மட்டும் ஓர் வெள்ளைச்சீலை இருக்கும். வர்ணங்களில் ஏற்படும் கசிவை ஒற்றி ஒற்றி வரைதலை நேர்த்திப்படுத்தும்வரை கருத்தூன்றி உழைப்பார். வகுப்பில் நடைபெறும் இலக்கிய மன்றக்கூட்டங்களில் அவரே நிரந்தரமான பத்திராதிபர். வாராவாரம் கருத்திற்கினிய அறிவியல் கட்டுரைகளைத் தொகுத்து வந்து வாசிப்பார். அத்தோடு சக மாணவர்களின் ஆக்கங்களை வாசித்து, நேர்மையான கருத்துக்களையும் முன்வைப்பார். தானே நாடகத்தை எழுதி நெறியாள்கையும் செய்து, வகுப்பில் சிறு இசைக்குழுவையும் உருவாக்கிப்பாடவைத்தார். மேலும், 'அணில்' என்ற பெயரில் சிறு பத்திரிகையையும் தன் கைப்படவே எழுதினார். இவைகள் யாவும் அவரது எட்டாவது வகுப்பில் அவதானிக்க முடிந்தது. திறமைகள் "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதற்கேற்ப இதுவரை பதியப்பட்ட செய்திகளுடன் இவற்றையும் மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவருடைய ஆளுமை தற்செயலானதல்ல; அவரின் பிறப்பில் உள்ள தேவையோடு கலந்தே வருவதாகும். மாவீரர் பற்றிய அறிவியலின் மையமாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் அவரது ஆளுமையும், உறுதிப்பாடும் பற்றிய தகவல்கள் இன்று தமிழர்களுக்கு மட்டுமல்ல; முழு உலகத்திற்குமே அறிய அவசியமான செய்திகளாகும். இதுபற்றி மாவீரரான வே.பார்த்தீபன் தனது கடைசிக் கடிதத்தில், தெரிவிக்கும்போது "தலைவர் பிரபாகரன் தமிழீழம் என்ற வார்த்தையை விட்டு, அதற்கு மாறாக வேறு சொல்லைக்கூட உச்சரிக்கவில்லை என்று, எதிரிகள் கூட அவரைப் புகழ்ந்து வாழ்த்துகிறார்கள்" என எழுதிவிட்டே மாவீரரானார். தலைவர் பற்றிய இந்த வரிகள் ஒருவர் மாவீரராகும் முடிவை எடுப்பதற்குரிய உச்சக்கட்ட நம்பிக்கையை தலைவர் எப்படி வழங்குகிறார் என்பதைப் புரிய வைக்கும் வரிகளாகும்.

பலம் என்பதை படைப்பிரிவுகளின் எண்ணிக்கை, பங்குச் சந்தையில் நாணயத்தின் பெறுமதி, நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, சக்திமிக்க நாடுகள் ஒன்றுகூடி அசுர பாதுகாப்பை ஏற்படுத்துவது போன்றவைகளால் எல்லைபோட முற்படுகிறது உலகம். இவற்றின் பின்னணியில் தம்மை இணைத்துக் கொண்டதினாலேயே இன்று பலர் உலகத்தின் கனவுத்தலைவர்கள். இவர்களையே உயரங்களாக்கி, அதற்காகவே அளவுகோல்களையும் தயாரித்து வைத்திருப்பவை தொடர்புச் சாதனங்கள். இத்தகைய தொடர்புச் சாதனங்கள் வளர்த்து வைத்திருக்கும் கருத்தியல் மாயைக்குள் நின்று பார்ப்போர்க்கு தமிழீழம் பலம் குறைந்த தேசமாகத் தெரிவது இயல்பு. இக்கருத்தை சுவாமி விவேகானந்தர் வேறோர் விதமாக எழுதியிருக்கிறார். "ஆங்கிலேயரால் எழுதப்பட்ட இந்திய சரித்திரம் நம்முடைய மனத்தைரியத்தை பலவீனப்படுத்தாமல் வேறு என்ன செய்யும்? அதனால்தான் அவர்கள் நமது தோல்விகளையே அதிகம் எழுதினார்கள்" என்பார். இது இந்தியர்களுக்காக அவர் எடுத்து





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரைத்த கருத்து. எனவேதான் இத்தகைய செயற்கை அளவுகோல்களால் அளக்க முடியாத நிஜமான பக்கங்களும் உலகில் இருக்கின்றன என்பதை நாம் அறிதல் அவசியம். அத்தகைய உயர்வுகளின் மிக முக்கிய புள்ளியே தமிழீழ விடுதலைப் புலிகள். குறைந்த மக்கள் எண்ணிக்கையுள்ள தமிழீழத்தில் இவ்வளவு பெருந்தொகையான மாவீரர்கள் தோன்றியதும்; ஓர் தலைமையின் ஆணை கேட்டு உயிர் கொடுக்க முன்வந்தமையும்; ஆசாபாசங்களுக்குட்பட்ட உலகின் அளவுகோல்களால் எட்டிப் பிடிக்கக்கூடிய விடயங்களல்ல. தொலைக்காட்சிகளின் சின்னத்திரைகளில் மின்னும் எத்தனையோ தலைவர்களிடம் மக்கள் குறுங்காலத்திலேயே நம்பிக்கையிழந்து, அடுத்த தேர்தலுக்காகக் காத்திருப்பதையும் நோக்கினால் நடைமுறை உலகம் தனது பெரும் பலவீனத்தை ஓர் திரைகொண்டு அடிக்கடி மூடி மறைத்து வருவதையும் காணமுடியும். இத்தகைய பலவீனமற்ற புதிய நாடே தமிழீழம். அதை உருவாக்க அனைவரையும் வழிநடத்தும் பலமாக நிற்பவரே தலைவர் பிரபாகரன். "சூரியத்தலைவன் வழிகாட்டி, இடையில் இருள் வந்தாலும் தளர்ச்சியில்லை, கைகளில் வெளிச்சம் இருக்கிறது. சின்னப்பூக்களெல்லாம் செருக்களத்தில் நின்றாடி சன்னப்பூ நெஞ்சினில் சாத்தும் தமிழீழம்!" என்று இதையே அடிக்கோடிடுகின்றன புதுவை இரத்தினதுரையின் கவிவரிகள்.

மேலும், ஒவ்வொரு நாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்திய தலைவர்களை அந்த நாட்டுச் சூழல்களும் தேவைகளுமே உருவாக்கி வைக்கின்றன. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் மாற்றங்களைச் செய்த கம்யூனிசம் இந்தியாவில் வெற்றிபெறவில்லை. இதனால்தான் இந்தியாவில் காந்தீயம் செய்ய முடிந்ததை கம்யூனிசம் செய்யமுடியாது போனதென்பார். இதுபோலவே இந்தியச் சூழலில் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் பொருந்திவரவில்லை. ஆனால், தமிழீழச் சூழலுக்கோ நேதாஜி மீது நாட்டமுடைய தலைவர் பிரபாகரனே தேவைப்பட்டார். இயற்கையின் நெருக்குதல்களால் பறவைகளுக்கு பறக்கவேண்டி ஏற்பட்ட தேவைபோல, ஓட்டத்தில் குதிரைகள் பெற்ற வேகம்போல, தமிழீழச்



சூழலில் வரலாறு உருவாக்கிவைத்த தலைமையே பிரபாகரன். அவர் இரண்டு விடயங்களையே எப்போதும் தாரகமந்திரமாக உச்சரித்துக்கொண்டிருக்கிறார். அதில் ஒன்று "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதாகும்". இது களத்தில் நிற்கும் கர்ம வீரரான புலிகள் தமது தாகமாக தாயகத்தையே கொள்ள வேண்டும்; வேறு எதையுமல்ல என்பதை அழுத்தி உரைக்கும் மொழியாகும். இவ் வாக்கியத்தால் விளங்க முடிவது புலிகள் என்பவர்கள் தமக்காக எதையும் கேட்பவர்கள் அல்ல; தமிழினத்திற்குரிய தாயகத்தைக் கேட்பவர்கள் என்பதாகும். எனவேதான் "விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள், அசாதாரணப் பிறவிகள்'' என்று அவரே எடுத்துரைக்கிறார்.

இரண்டாவது முக்கியமான செய்தி; கரும்புலிகள் இறுதியாக விடைபெறும் போது அவரால் கூறப்படும், "நீங்கள் முன்னால் போங்கள் நான் பின்னால் வருகிறேன்!" என்பதாகும். இதன் மூலம் கரும்புலிகளின் உயரிய தியாகத்தை அவர் பூரணமாக ஏற்றுக்கொள்கிறார் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. மரணத்தின் திகதியறிந்தே அவரிடமிருந்து விடைபெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட கரும்புலிகளும் கேட்டுச் சென்ற தலைவரின் இறுதி மொழியும் இதுவே. உண்மையில் இது ஓர் நிலையாமைக் கருத்தல்ல. மாவீரன் என்பவன் மரணிப்பதில்லை. அவன் மறுபடியும் ஜனனிக்கிறான் என்ற கருத்தாக்கத்திற்கு அடித்தளமிடும் குரலாகும். பண்டைக்காலம் முதலே 'அவதாரம்' என்ற சொற்பதம் இருந்துவருகிறது. இது யுகபுருஷர்கள் திரும்பத்திரும்பப் பிறக்கிறார்கள் என்ற தத்துவத்தின்பாற்பட்டது. போர்க்களத்தில் அர்ச்சுனனை நோக்கி கண்ணனால் உபதேசிக்கப்பட்ட கீதையிலும் இவ்வரிகள் வருகிறது, "யுகங்கள் தோறும் நான் பிறக்கிறேன்; தர்மம் அழிவெய்தும் காலத்தும் நான் பிறக்கிறேன்!" என்ற வாசகத்தில்; "முன்னால் போவோரே பின்னால் வருகிறார்கள்!'' என்ற செய்தி மறைந்திருக்கிறது. கீதை மட்டுமல்ல பைபிள், குர்ஆன் உட்பட எல்லா நூல்களுமே கர்ம வீரர்களை நோக்கி இதையே உச்சரிக்கின்றன. இதன் தாற்பரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யத்தை உணர்ந்து; மறுவரவிற்காக காற்றுள் மறைந்து போனோரின் அடையாளச்சின்னங்களே மாவீரர் துயிலிடங்கள். அவர்களை மகத்துவப்படுத்தும் நாளே மாவீரர்தினம்.

இத்தகைய மாவீரர்களே இறப்பிற்கும் வாழ்விற்கும் நடுவில் உள்ள இடைவெளியான அச்சத்தை உடைத்தெறிந்தவர்களாக உள்ளனர். ஆகவேதான் அவர்களின் இலட்சியமான தமிழீழ தாயகத்தை மற்றவர்களால் உடைத்தெறிதல் முடியாத காரியமாகிறது. தேசியக் கொடியாகிய புலிக்கொடியால் அவர்களின் வித்துடல்கள் மூடிச் செல்லப்படும்போதும் முக்கியமான வரலாற்றுச் செய்தி ஒன்றுடனேயே அவர்களின் யாத்திரைகள் நடைபெறுகின்றன. எவ்வாறெனில் விடுதலைப் புலிகளைப் போலவே ஆதியில் புலிக்கொடியை ஏந்தியவர்கள் சோழர்கள். ஆனால் அவர்களது போட்டியாளர்களாகிய சேரரோ அல்லது பாண்டியரோ அல்லாவிடில் இதர குறுநில மன்னர்களோ எப்போதுமே சிங்கத்தைத் தமது கொடியில் ஏந்தியதாகத் தெரியவில்லை. காரணம் சிங்கம் திராவிட விலங்கன்று. அரிமா என்பது சிங்கத்திற்கு தமிழர்கள் இட்ட பெயர். இதன் கருத்து அரிதான விலங்கு என்பதாகும். ஆகவேதான் சிங்கச் சின்னத்தைக் குறியீடாகக் கொண்ட சிங்களவர் ஈழ மண்ணிற்கு உரியவர்கள் அல்ல; என்பதையே சிங்களக் கொடி உணர்த்துகிறது. உண்மையில் இலங்கை நாகர்களின் தீவாகவே இருந்தது. நாகர்களால் பரவிய இயக்கமே நாகரிகமெனப்பட்டது என்று கூறுகிறது தமிழர் சமுதாய வரலாறு என்ற நூல். எனவேதான் தமிழர் தாயகத்தை மீட்டெடுக்கும் செய்தியால் வரையப்பட்டு; வரலாற்றோடு அமைவு பெற்றுக் கொண்டதே புலிக்கொடி எனலாம்.

மேற்கூறிய கருத்தாக்கங்களின்படி பார்த்தால் தலைவர் அவர்கள் புலிகளாக இருப்போர் தமிழீழத் தாயகத்தை குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்றும்; "நீங்கள் முன்னால் போங்கள் நான் பின்னால் வருகிறேன்" என்னும் வரிகளை கரும்புலிகளுக்காகவும், தமிழர் தாயக உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுண்மையை தேசியக் கொடியிலும் விளக்கியிருப்பது உண்மையானால்; அவர் சாதாரண மக்களுக்காக எதையும் கூறவில்லையா? என்பதும் இங்கு முக்கிய கேள்வியாகிறது. அதற்கான பதிலைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் செயல் மூலமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். "சொல்வதல்ல செய்வதே விடுதலைப் புலிகளின் பணி" என்பதன் அர்த்தம் இதுவே. தமிழர் பொதுமறையான திருக்குறள் கூட இதையே உணர்த்துவதாயுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று விடயங்களை மட்டுமே திருக்குறள் விபரிக்கிறது. வீடுபேறு பற்றி வள்ளுவர் கூறவில்லை. நெறிப்படி வாழ்வதே வீடு பேற்றுக்கான வழி. இதை அவர் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்" என விபரித்துள்ளார். விடுதலைப் புலிகளின் நெறியும் இதுவே. அவர்கள் வாழவேண்டிய இலட்சியத்துடன் வாழ்கிறார்கள். அந்த உயரிய இலட்சியமே அவர்களில் பலரை மாவீரர் தியாகிகளாக்கியிருக்கிறது. அத்தகையோரே வானுறையும் தெய்வங்களாக மதித்துப் போற்றப்படுவர் என்பது இன்று நேற்றல்ல வள்ளுவர் காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்டைத் தமிழர் பண்பாடாகும். அந்த வரலாறே இப்பொழுது மறுபடியும் தமிழீழத்தில் உதயமாகியிருக்கிறது. அந்த வரலாற்றின் விடிவிற்காக உயிரால் விளக்கேற்றியிருப்போரே சூரியப் புதல்வர்களாவர். ★

# ஓ... மாவீரர்களே!

என் பெயருக்குப்
பின்னால் நீண்ட
பல்கலைப் பட்டங்களில்
பரவசம் அடைந்திருப்பேன்.

பதவிகள் பெற்று
உயரப்
படிகளில் கால்பதித்த
நொடிகளில் எல்லாம்
களிப்பு என்னைத்
தின்றிருக்கும்.

காலையில் உண்டபின்பு
பந்தலில் வந்தமர்ந்து
மாலையில் கலைந்துசென்ற
'உண்ணாவிரதப்' போராட்டங்களில்
பங்கேற்ற
பெருமையும் இருந்திருக்கும்.

காவலர்கள் கைது செய்யச்
சில நாட்கள் வீடுவிட்டுச்
சிறை சென்ற நாட்கள் எல்லாம்
'தியாகம்' தான் என்று
மனசுக்குள் மகிழ்ந்திருப்பேன்.

கழுத்தினில் விழுந்த மாலை
காதினில் குவிந்த வாழ்த்து
எல்லாம் நெஞ்சத்தில்
எப்போதும் இனித்திருக்கும்.

நான் வாழ்ந்ததும்
வாழ்வே என்ற
எண்ணத்தில் இறந்திருப்பேன்.

இவையெல்லாம் நடந்திருக்கும்.



ஓ...... மாவீரர்களே!
உங்களைப் பற்றிமட்டும்
நான்
அறியாது போயிருந்தால்!

— சுபவீ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பற்றறுத்து..., தேசம் பற்றி எழக் கைதந்து...

நினைவுகள் தாங்கி
எமக்குள்ளே போரிட்டு
தடையுடைத்துப் பாயும்
கண்ணீரால் குளிப்பாட்டி...

சொற்கொண்டு அழகோடு
சோடனைகள் செய்வித்து...

அன்பின் பெருக்கத்தால்
அர்ச்சனை செய்து...

கவிதை வடம் பிடித்து இழுக்கின்றோம்!

"மாவீரர் புகழ் வாழ்க!"

என்றாலும்...
வறுமைப்பட்டுள்ளோம்
வார்த்தையின்றி வடிவமின்றி
போற்றுதற்கும் புகழ்பாடி – மனம்
ஆற்றுதற்கும் வழியுமின்றி
வார்த்தை வறுமை எங்களுக்கு

எப்படி...
எம் புலிவீரரை எப்படிப் பாடுதல்
புகழ்க்கவி புனைந்து எப்படிச் சாற்றுதல்
எண்ணிக்கலங்குதற்கு முடிகிறதே அல்லாது
சொற்கள் கரம்பற்றிக் கவிதைப்பூ பூக்குதில்லை.
எண்ணக்கதவுடைத்து
விரைகின்ற கவிகூட
கண்ணீர் தடவி... கரைந்து மறைகிறது.



முடியாது...!
வார்த்தைகளால் முடியாத வரலாற்று வித்தகத்தை
பொருள் உரைக்க முடியாத அர்ப்பணிப்பின் அற்புதத்தை
வார்த்தைச் சிறையிலிட்டு
அதற்கொரு வடிவமிட்டு
பாடுதற்கும் பேசுதற்கும் கூட்டுப்பண் இசைப்பதற்கும்
முடியாது!
அது எமக்குள்ளே நிகழ்கின்ற அநுபவம்!
வானம் பிளந்து
"ஓ" வென்று மழைகொட்ட
பூமி தகிக்கின்ற
புதுமை எங்களுக்குள்!

மெய் சிலிர்க்க... மேனி நடுங்க...
கண்கள் கசிந்துருகக்
கலங்கியழும் போதெல்லாம்
நெஞ்சை நிமிர்த்துகின்ற
நினைவுகளே எங்களுக்குள்.

பற்றுதலைத் துறந்து
தேசம் பற்றியெழக் கைதந்து வழிகாட்டி
விடுதலைக்கு வேண்டும் வித்துடலம் என்று
தம்மை விதையாக்கி மண்ணில் புதைத்து
நிலப்பரப்பை பிளந்து மீண்டும் முளைவிட்டு
விடுதலைச் சக்கரம் விசையுறும் வண்ணம்
விசையாகி...

எம்மை எம்மினத்தை எம் தாய்நாட்டை
இயங்கவைக்கும் அற்புதத்தை...
விடுதலை அவாவி... விலங்குடைத்து புடைத்தெழுந்த
விடுதலையின் மெய்யூற்றை
வார்த்தைக்குள் வளைந்து சிறைப்பிடிப்பதென்பது
எப்படிச் சாத்தியம்!

– ஜெயா –

www.tamilarangam.net

# உதயத்திற்காக உதிர்ந்திடும் நட்சத்திரங்கள்

மாவீரர்!
காதலர்களாக காலம் ஓட்ட வேண்டிய வயதில்
தமிழ் காவலர்களானவர்கள்.
கால்களால் போர்க்களங்களை உழுதவர்கள்.
மோதல்களால் உடல் புண்ணாகும் போது தமிழ் -
மோகத்தால் வடுக்களை முத்தமிட்டவர்கள்.

அவர்கள்!
சதையும் எலும்பும் கொண்ட சகட்டு மேனியர்களல்ல
எதையும் தாங்கும் இதயம் கொண்ட சரித்திர நாயகர்கள்.
உதயத்திற்காக உதிர்ந்திடும் நட்சத்திரங்கள்
உலகில் ஒப்பில்லை அவர் செய்யும் தியாகங்கள் -
உயிரை உருக்கும் யாகங்கள்!

இருளில் தான் வாழ்க்கை என இருப்பது சில - உயிரினம்
இதுவல்ல வாழ்க்கை என்று எழுந்ததுதான் - தமிழ் இனம்
விடியும் போது பறக்கும் பாடும் புள்ளினம் - அந்த
விடிவைத் தரப் பிறந்ததுதான் புலியினம்.

உரிமைக்கு உயிர்விடும் மாவீரர்- உத்தமர்கள். அதில்
பெருமைக்கு உரியவர்கள் அவர்களைப் பெற்றவர்கள்.
கொடுமைக்கு எதிராய்க் குரல் கொடுத்த இவர்கள்
கோடிப்பிறப்பில் குலவிளக்குகள்.

கடற்புலிகள் கலம் வந்த கடல்கள்- அங்கு
கரும்புலிகள் கரைத்த அவர் உடல்கள்
வயல் வெளிகள் எல்லாம் சொல்லும் வலிகள் - அந்த
வயலுக்கே உரமிட்ட உயிர்ப் பலிகள்.

களம் சென்று திரும்பாத பெண் கிளிகள் - வீரக்
காவியமாய் அவர் வரைந்த (உணர்வுச்) சுழிகள்
பழம் தமிழ் அரசாளச் செய்யும் வழிகள் - அதற்கு
இளம் புலிகள் உயிரம்மா விலைகள்.

புலிக்கொடி பறந்த நாட்டில் இனிப்
புதுக்கொடி பறப்பது வெட்கம்.
பலி எடுக்க வந்த படைகள் - இன்னும்
பலாலியிலும் இருப்பதுதான் துக்கம்
வேலியில்லாப் பயிரென்றால் வெள்ளாட்டிற்குச் சொர்க்கம் - அதனால்
தாலி சுமக்கும் கழுத்திலெல்லாம் சயனைட் குப்பி தானே தங்கம்.

தீதி மாதம் பார்ப்பதில்லை வீரம்
தினையளவும் குறைவில்லைத் தமிழன் மானம் - அடிமைப்
பொதி சுமந்த காலம் இனிமாறும் - இப்போ
நிதியிருந்தால் நாளை வரும் தமிழ் ஈழம்.

(அங்கு)
அழிவது அடுத்தவன் சொத்தல்ல - நமது
அம்மா அப்பன் போட்ட வித்து
வழிவது வனவிலங்குகளின் இரத்தமல்ல- நம்
வழிவந்தவன் வலியுடன் சிந்தும் இரத்தம்.

தெரியுது தேடி அழிப்பவன் சித்தம்
விரியுது வான்வரை அவலச் சத்தம் - புலிகள்



- சிவபாலன் -
(நியூயோர்க்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரிவது உரிமைக்கான யுத்தம்– இதைப்
புரியாதவன் சொல்வான் புலிகள் மேல் குற்றம்.

தம்பி வழி சென்றால் தான் தமிழ் வாழும்
தமிழுக்கொரு நாடு உலகில் உருவாகும்.
நம்பி நடந்தால் நாளை நிலை மாறும்
நம்பிக்கைதானே எமக்குப் பலமாகும்.

நாளை–
பனையில் கூட பறக்வேண்டும் தமிழ்க்கொடிகள்
பார்க்குமிடமெல்லாம் இருக்கவேண்டும் தமிழ் வரிகள்
ஓடவேண்டும் தொல்லைதரும் நரிகள் – அவர் மேல்
போட வேண்டும் நாம் அரிசிப் பொரிகள்.

இராணுவம் –
குடிக்கத்தானோ வந்தான் பனங்கள்
குவியலாய்க் கிடக்குதய்யா பல பிணங்கள்
விடியுமுன் மடியுது பல தினங்கள் – அங்கு
விடியலுக்கு இங்கு வேண்டும் நல்ல மனங்கள்.

பத்து ஆண்டுகளுக்கு மேலான தமிழன் போராட்டம் – அவன்
சொத்து ஈழம் என்பதைக் காலம் காட்டும் – காணி
வித்து வெளிநாடு வந்தவர் ஏராளம் – அவரும்
ஒத்துழைத்தால் செத்திடாது தமிழன் மானம்
இனியொரு விதி செய்ய இணைப்போம் – தம் கைகளை.
இல்லையொரு துன்பம் எனப் பொங்கட்டும் – இளம் தலைமுறை.
இருள் அகன்று புலரட்டும் ஈழத்தில் வைகறை – அதற்கு
இன்றுமுதல் நிறைத்துவிடு (உதவி செய்யும்) நிதிப்பைகளை.

திலகமிட்டுப் போருக்கு அனுப்பும் குணம் – தமிழனின் குணமாகும்.
திகட்டாத அவன் வீரத்தின் சாரம்தான் – மாவீரர் தினம் ஆகும்.
உலக தமிழரின் ஒற்றுமையே தமிழுக்குப் – பலமாகும்.

மாவீரர் பெருமை சொல்லி ஏற்றுவோம் தீபம்
மாவீரர் எண்ணம் ஈடேறப் போடுவோம் பூ தூபம்.

மாவீரர்களே!
சமாதிகளில் உறங்குவது உங்கள் உடல்கள் மட்டும்தான்.
உங்கள் உணர்வுகளும் தியாகங்களும்
கடைசித் தமிழன் உள்ளவரை வாழ்ந்து
கொண்டுதான் இருக்கும்.

# உங்களால்....

ஓ
மாவீரர்களே!
எதிரியை
வேரோடு
பிடுங்கும்
ஆற்றலை
எமக்களித்து
விழி மூடினீர்...
மண்ணில் –
நீங்கள்
தகர்த்தெறிந்த
பகைவனின்
எறிகணை
வண்டி
மறைப்பில்
எங்கள்
பூனைகள்
குட்டி
போடுகின்றன.
கடலில் –
நீங்கள்
மூழ்கடித்த
எதிரியின்
போர்க்கப்பல்
உள்ளே
எங்கள்
மீன்கள்
குஞ்சு
வைக்கின்றன.



வானில் –
நாங்கள்
சுட்டுவீழ்த்தி
வயலில்
நொறுங்கிடக்கும்
பகைவனின்
குண்டுவீச்சு
விண்ணூர்தி
இறக்கைகளில்
எங்கள்
குருவிகள்
குஞ்சு
பொரிக்கின்றன.

ஓ
மாவீரர்களே!
இது –
மண்ணிலும்
கடலிலும்
வானிலும்
எதிரிகளின்
உடைவுகளில்
எமது
தாயகம்
புதிது பிறக்கும்
காலம்.
இங்கேதான் –
எங்கள்
குழந்தைகளும்
பிறக்கின்றன.

- உணர்ச்சிக்கவிஞர்
காசி ஆனந்தன்

www.tamilarangam.net

# சூரியனைப்பழித்த சூரியப்புதல்வர்கள் தமிழீழ சரித்திரத்து சாகா மனிதர்கள்

இது கற்பனைக் கதை கூறுதற்கு எழுதிய கவர்ச்சித் தலைப்பல்ல. ஒப்பனை இல்லாத் தியாக வரலாற்றின் சரித்திரக் குறிப்புகள் தந்த சக்தியிலே பிறந்த உரைவீச்சு; சந்ததி வாழத் தம்முயிர் தந்த மானிடத் தெய்வங்களாம் எங்கள் மாவீரர் மாட்சி கூறப்பிறந்த தமிழ் வீச்சு; ஆனாலும் இது பொய்யுரை அல்ல. ஏனெனில், தமிழீழத் தேச மண்ணில் முன்னூற்றி ஐம்பத்தொரு ஆண்டு காலமாய் (1621—1972) சூரியன் உதித்தது உண்டு; மறைந்தது உண்டு. ஆனாலும் அம்மண்ணில் காலனித்துவமும் அதன் வழி வந்த நவீனகாலனித்துவ சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களும் ஏற்படுத்திய இருளை அகற்ற ஆதவனால் முடியவில்லை. அழுவதும் – தொழுவதும் – அடுத்தவர் எமக்கு உரிமை பெற்றுத் தரமாட்டாரா என ஏங்குவதும் – சலுகைகள் பெறுவதும் – சரணாகதியாவதும் – ஏமாந்தோம் ஏமாற்றப்பட்டோம் என்பதே தமிழர் வரலாறு ஆகிநின்றது. இதனை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சிங்கள பௌத்த பேரினவாதிகள் ஒற்றையாட்சியில் கூடிவாழ காலனித்துவம் தமிழ் — சிங்கள தேச இனங்களுக்கு விதித்த நிபந்தனைகளை எல்லாம் தூக்கி எறிந்து சோல்பரி அரசியலமைப்பையே வன்முறைப்படுத்தினர்.

தமிழர்கள் ஜனநாயக வழியில் எதிர்ப்புகளைத் தெரிவிக்க முனைந்த போதெல்லாம் சிங்கள பௌத்த சிறீலங்காவால் வன்முறை கொண்டு ஒடுக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக 1976–ல் தமிழீழத்தேசம் எனும் தங்கள்

**- பற்றிமாகரன் -**



வரலாற்றுத்தாயகத்தை மீளப் பெறுவதற்கான சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை விடுத்து தமிழீழ தேசமே தங்களது முடிந்த முடிவு என 1977 பொதுத்தேர்தலில் உறுதி செய்தனர். இந்த மக்கள் விருப்பை ஏற்க மறுத்த சிறிலங்கா அரசாங்கம் தமிழீழ மக்கள் மீதான யுத்தத்தை பிரகடனப் படுத்தி பகிரங்க இன அழிப்புகள் மூலம் அச்சத்தை தமிழ் மக்களிடை தோன்ற வைத்து அவர்களது அரசியல் கோரிக்கையை ஆயுதமுனையில் நசுக்க முயன்று வருகின்றனர். இதனை தமிழீழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான தமிழீழ தேசிய விடுதைலப் போராட்டத்தின் மூலம் எதிர்த்து தமது வரலாற்றுத் தாயகமான தமிழீழத் தேசத்தை பிரிக்கும்படியும் கேட்கின்றனர். தமிழர்களது வரலாற்று தாயகம் சில நிபந்தைனகளின் பேரில் காலனித்துவ அரசால் சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டது. இவற்றை சிங்கள அரசு மீறிவிட்டதால் தாம் விலகி கொள்வதாகவே அறிவித்தனர். இந்த சட்டபூர்வ செயற்பாட்டை ஏற்கமறுத்து பிரித்தானியம் கொடுத்த இலங்கைத் தீவின் அரசாங்கம் என்ற அதிகாரத்தை துஷ்பிரயயோகம் செய்து தமிழீழ தேசம் மீதும், மக்கள் மீதும் ஆக்கிரமிப்புச் செய்து நிற்கின்றது. ஆக்கிரமிப்பாளன் படைபலம் கொண்டும், சர்வதேச ஆயுதக்கொள்வனவுகள் உதவிகள், பயிற்சிகள் கொண்டும் கடுமையான சுடுதிறன் பிரயோகத்தினால் தமிழீழ மக்களை பகிரங்க இன அழிப்புச் செய்து அவர்களின் தேசத்து இயற்கை வளங்கள், உட்கட்டுமானங்கள் அனைத்தையும் அழித்தொழித்து வருகின்றது. இவை எல்லாம் சர்வதேச சட்டங்களுக்கு எதிராக செயற்பாடாக இருந்தும் சந்தை நலன்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவ வல்லான்மை நோக்கங்களும் சர்வ தேச அமைப்புகளின் கண்டனத்தை, கட்டுப் பாட்டை பெருமளவில் சிறிலங்கா மேல் ஏற் படுத்தவில்லை என்பது வேதனையான உண்மை. இதனால் தமிழீழ மக்கள் தமது தேச விடுத லைக்கு தம்முயிரையே உயிராயுதமாகக் கொண்டு போராட வேண்டியவர்களாக உள்ளனர்.

தங்கள் சந்ததி வாழ தம்மையே அர்ப்ப ணித்த விடுதைல நெஞ்சங்களின் செயற்பாடு கள் அவர்களை மாவீரர்களாக மக்கள்முன் உயர்த்தி நிற்கின்றது. ஆதலால் மாவீரர்கள் என்பவர்கள் உயிரிழந்த வீரர்களின் பட்டியல் அல்ல. தமிழீழ தேசத்திற்கும் மக்களுக்கும் உயிரூட்டும் உயிர்கலங்களின் – சக்திப்புனல்க ளின் பெயராகும். இந்த மாவீரர்களின் சக்தியி னால்தான் தமிழீழம் ஒளிபெறுகின்றது. இவர்க ளுக்கு தன்மானம் குற்றெழுத்து, இனமானம் உயிரெழுத்து. உயிரெழுத்தின்றி குற்றெழுத்து இயங்காது. இனமானமும் தன்மானமும் மேலா னது எனபதை தங்கள் வாழ்வில் காட்டி நிற்கின் றனர். உயிர் மேலானதுதான். ஆனால் அதை விட மேலானது தன்மானம். உயிர் என்றோ ஒருநாள் விடுபட வேண்டியது. ஆனால் தன் மானம் என்றுமே விடுபடமுடியாது என்பதை தெளிவுபடுத்திய இனமான வீரர்கள் நம் மாவீரர் கள். அதனால்தான் இவர்களால் புத்துயிர் பெற்ற தமிழீழ மக்கள் உறுதிகுண்டு நெஞ்சின ராய் சிங்கள பௌத்த சிறிலங்கா எனும் ஆக் கிரமிப்பு அரசாங்கத்தின் அனைத்து மனித வதைகளையும் தாங்கி போராடி வருகின்றனர். தமிழரின் சதையைக் கிழிப்பதால் இவர்கள் இலட்சியத்தை அழித்திடலாம், இவர்களின் உயிரைக் குடிப்பதால் விடுதலை வேட்கையை ஒடுக்கிடலாம் என்பது சிங்கள அரசின் செயற் திட்டம். இதனைத் தவிடு பொடியாக்கி சிதையி லிருந்தும் தமிழீழ விடுதலைப் போராட்ட சக்தி எழுந்து வரும். ஒரு வித்துடல் விதைக்கப்படும் கல்லறையும் ஓராயிரம் புதிய வீரரை கருத் தரித்து விடுதலைப் புலிகளாய்ப் பாய்ந்து புறப் பட வைக்கும் என்ற புதிய வரலாற்றை சிங்கள அரசுக்கு உணர்த்தி வருகிறது.

மரணமில்லாத மனிதகுலம் ஒன்று இந்த மண்ணில் தோன்ற வேண்டும். ஒருவனது வாழ்வு நேற்ருனால் அதுதான் மரணம். ஆனால் தமிழீழ மாவீரர் வாழ்வு என்றுமே நேற்றாகப் போவதில்லை ஆதலினால் அவர்கள் மரணமில் லாத மனிதர்கள். அவர்கள் தரும் சக்திதான் தமிழீழத் தேசம். ஆதலால்தான் அவர்கள் தினமான மாவீரர் நாள் தமிழீழத் தேசமக்கள் தம் தேசநேநசத்தை வெளிப்படுத்தி தமிழீழம் மலர உழைக்க உறுதிபூணும் உறுதியின் நாளா கவும் உள்ளது. இந்த உறுதி – இந்த தேசநேசம் எந்த இடத்தில் வாழும் தமிழீழ மகனுக்கும் பிறக்கின்ற புனிதநாளாக மாவீரர் நாள் பூசிக் கப்படுகிறது. ஆதலால் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம், எங்கள் மாவீரர் நாளும் எங் கள் தமிழீழ தேசத்து தேசிய நாளுமான இன்று தமிழீழம் மலர, மாவீரர் உழைப்பு பயனாகு மாறு, உயிர்ப்புற நம்மால் ஆன அனைத்தையும் செய்வோமாக.

இறுதியாக கெந்தக குழம்பால் ஒளிரும் சூரியன் போல, தமிழீழ விடுதலை குமுறலினால் போராளியாகி எம் தேசத்தை ஒளிர வைக்கும் மாவீரர்கள் சூரியப் புதல்வர்கள் சூரியனால் கூட விளக்கேற்ற முடியாத எங்கள் தேசத்திற்கு ஒளியூட்டுவதால் சூரியனைப் பழித்த சூரியப் புதல்வர்களாக தமிழீழத் தேசத்து சரித்திர நாயகர்கள் இயங்குகின்றனர். இவர்கள் எம்மோடு எம்சந்ததியோடு, தேசத்தோடு யுகம் யுகமாக வாழப்போகும் சாகா மனிதர்கள். ★

# நெஞ்சுக் குழியினுள் கொலுவுற்ற

- கோசல்யா சொர்ணலிங்கம் –

முல்லைகம்



மாரியில் மழை பொய்த்தது மண்ணது பிளவேற்ப,
கோடையின் வனப்புகள் போயின குடில் கொட்டின - மழையிலாட
ஜாடையாய்ப்புரிந்து அந்நியம் ஆளுகை கொள்ள
தாடையைக் கையிலலேந்தி தரித்திடும் சூரியன் - தகித்திடுமோ?
நிலவது தெறித்து வீணே தமிழ் நிலமது காயும் வேளை
மலரது மகிமை தரா மண்ணில் மாய்ந்திடும் பொழுதில் - தமிழீழ
குலமதில் உதித்த தொப்புள் கொடியுற வுடைமாவீரர் - தாய்
நிலமது மீட்பின் யாகம் நெஞ்சுக்குழியினுள் - கொலுவுற்ற
சூரியப்புதல்வராவார்.

www.tamilarangam.net

# மாவீரர்

வீதி எங்கும் வீரச்சாவுகள்
அடையாளமாய் துயிலும் இல்லங்கள்
மண் சிவந்து கிடக்கிறது
மனிதர்கள் விழித்து
விடி தழல் சுமக்கின்றார்
சத்தியமாய் இது
எங்கள் பூமியின் சரிதம்
விதியே எனக்கிடந்தோர்
விதி செய்யப் புறப்பட்ட
வீரம் மிகு சரிதம்
சாவை அழைத்து
சாகாவரம் பெற்று
உடலை அழித்தும்
சுதந்திர சுடர் ஏந்தும்
பிரபாகரத் தலைமுறையின் கதை

நூற்றாண்டின் ஆரம்பம்
சிங்களத் தீ
தீவெங்கும் வேர் விட
தமிழர் தீவாகி
சேவகம் செய்தனர்

மௌனம்
உரிமையின் மரணத்திற்கு
விறகுகளாயின
பார்த்திருக்க அனைத்தும்
பகிரங்கமாய் நடந்தது
வெள்ளையன் சென்றதும்



ஒப்பந்தம் போட்டனர்
முறிந்து விட்டதாய்
ஓலம் போட்டனர்
மீண்டும்
பேச்சுவார்த்தை நடாத்தினர்

படித்தவர்
பட்டிமன்றம் வைக்க
ஜெயவர்த்தனா
தீர்ப்பு வழங்கினர்
போர் என்றால் போர்

## திசைகாட்டும் விசைகள்

சிங்களம் அமர்ந்ததும்
தமிழர்கள் கதறிட
சிங்களம் வென்றதும்
பகிரங்கமாய் நடந்தது

மௌனம்
உரிமை மரணத்திற்கு
எண்ணெய் வார்த்தது

கலவரம் தலைப்புச் செய்தி
படுகொலைகள் பதிவாயின
குடி அழிப்பின் குண்டு வீச்சாய்
குடியேற்றங்கள்
கிபீரும் புக்காராவும்
இன்றுதான் வந்தவை
டட்லியும் பண்டாவும்
அன்றே செய்தனர்
போராடப் புறப்பட்ட
படித்தவர்

ஜெயவாத்தனா
பாதைகாட்டினார்
புறப்பட்டவர் எல்லாம்
புறமுதுகு காட்டினர்
சட்டத்தரணிகள்
சிங்களச் சட்டத்தில்
சரத்து தேடினர்

போர் என்றால் என்ன?
மௌனமாய் வாழ்ந்து
மௌனமாய் மரித்து
அடுத்த பிறப்பையும்
மௌனமாய்க் கழித்திட
முடிவெடுத்த நமக்கு
போர் எதற்கு?

ஏற்றுக் கொள்வோம்
சிங்களம்
அரச மொழி

www.tamilarangam.net

பௌத்தம்
அரியணை மதம்

நமக்கேன் வீண்வம்பு

சிங்களத்தில் நாம்
ஏடு தொடக்கி
சேலையின் மடிப்பை
மாற்றிக் கட்டி
புத்தரைத் தொழுது
யானைக்கும் கைக்கும்
புள்ளடி இட்டு
ஈரப்பலாக்கையுடன்
வாழ்ந்திடலாம்

நமக்கேன் வீண்வம்பு

ஆயினும்
இயற்கையின் நியதி
பிரளயம் செய்தது
பிரபாகரன் பண்பாடு
வேர் விட்டது

உரிமைக்கு உயிர் கொடுத்து
மௌனமான சாவுக்கு
விடை கொடுத்திட
தலைமுறை முடிவெடுத்தது

விடுதலைப் போரே
முற்றத்துச் செடிக்கு
நீர் பாய்ச்சும்
காற்றை எமக்குத் தரும்

தலைமுறை முடிவெடுத்தது
தர்ம யுத்தம் முளைவிட்டது

தலைவர் வழி பற்றி
தலைமுறை நடந்தது
அண்ணர் கரம்பற்றி
தலைமுறை எழுந்தது

82 நவம்பர் 27
சங்கர் என்னும்
வித்தை விதைத்தோம்
விருட்சமாய் அது
விண்ணைத் தொட்டது

பாதை எங்கினும்
ஓரடி வைப்பினும்
சாவுகள் அங்கு
சாட்சியமழிக்கின்றன

ஒன்றாய் நூறாய்
ஆயிரமாய் வீழ்ந்தாலும்
வித்துடல் எமக்கு
உயிர்ப்பைத் தந்தது
வீர மிகு தேசம் என்ற
இறுமாப்பைத் தந்தது

காவோலை விழுந்தாலும்
ஒப்பாரி வைக்கும்
அம்மா
குருத்தோலை விழக்கண்டு
நெஞ்சு நிமிர்ந்தாள்.
தாத்தாவின் சாவிற்கு
ரகசியமாய் அழுத

அப்பா
பேரனின் சாவிற்கு
காரணம் சொல்கிறார்

சாவு இங்கே
சரித்திரம் படைக்குது

மாவீரர் எமக்கு
திசை தருகின்றனர்
அறிந்து கொள்ளுங்கள்
நாம்
மாவீரர் பரம்பரை

அருணாச்சலமும் பொன்னம்பலமும்
நேற்றுவரை வாழ்ந்த கனவானும்
எமக்கு அன்னியர்கள்
சங்கரும் மாலதியும்
இன்று வீழ்ந்த எனது தோழனும்
எமது அடையாளங்கள்

விடுதலையே
வாழ்வின் உயிர்ப்பு
விடுதலையே
மூச்சின் வியாபக எல்லை
விடுதலையே
இருப்பின் ஆத்மார்த்தம்

மாவீரர் கருவறைகள்
காட்டும் திசை இது
யார் வந்து தடுத்தாலும்
எது வந்து வீழ்ந்தாலும்
எம் தேசம்
எம் உரிமை
எமக்கே சொந்தம்.

**- நாதன் -**

www.tamilarangam.net

## மேஜர் கமல்

கமல் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இவனது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டெடுக்க சரியான தீர்வாகாது என்பதை உணர்ந்த கமல், எமது இயக்கத்திலே தன்னை இணைத்துக்கொண்டு போராடத் தொடங்கினான். பயிற்சியை முடித்துவிட்டு மட்டக்களப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றியிருந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக் கூடியது.

மட்டக்களப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித் திறமையினால் எத்தனையோ அரும்பெரும் காரியங்களை ஆற்றியிருக்கிறான். இவன் அங்கு பணியாற்றிய காலத்தில் ஒரு பெண்ணைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண்ணுடைய வீட்டுக்கு கமல் செல்வது வழக்கம். ஆரம்ப காலங்களில் நாட்டின் விடுதலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து கமல் பணியாற்றியது கமலின்பால் அந்தப் பெண்ணின் கவனத்தை ஈர்த்தது. கமல் வீட்டுக்குப் போகும் சமயங்களில் எல்லாம் அன்பாக உபசரித்து கமலுக்கு ஆதரவளித்து, அன்பு செலுத்தினாள். நாட்கள் நகரநகர இருவரும் அன்பால் இறுகப் பிணைக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் மனமார நேசித்தனர். உலக வழக்கப்படி கூறினால் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டிருந்தனர். அப்பெண் கமலின் உயிர் வாழ்வுக்காக எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். ஆனால் ஒரு போதும் கமலின் தீவிரமான போராட்டத்திற்கு தடையாக இருந்ததில்லை.

மட்டக்களப்பில் இருந்து கமல் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையில் நெல்லியடி முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்ற முன் வந்தான்.

முதல் நாள் கமலும், திலீபனும் ஒன்றாக இருந்த வேளையிலே திலீபனிடம் ஓர் வேண்டுதல் விடுத்தான் கமல். "நான் சிலவேளை இத்



www.tamilarangam.net

தாக்குதலில் சாவடைந்தால் என்னை நேசிப்பவளுக்கு அதை உடனடியாக தெரிவித்துவிடு'' என்பதே அது. என்ன சத்தியமான வார்த்தைகள். ஏதோ தன் இறப்பைத் தானே அறிந்து வைத்திருந்தது போல் கூறியிருக்கிறான்.

## கரும்புலி கப்டன் மில்லர்

“மில்லர் சற்றுப் பொறுத்துக் கொள்! அந்த 'பங்கர்' உடைக்கப்பட்டதும் நீ செல்லலாம். மிக விரைவாக வண்டியைச் செலுத்தி வண்டியை விட்டு விட்டு நீ இறங்கி ஓடி வந்துவிடு” என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சிரித்துக் கொண்டான். ஏனென்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவுக்கு ஏனென்று கேட்க மனம் துணியவில்லை.

“பிரபா! முன்பு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாகச் செல்லவில்லை. எனவே இம்முறை நான் மிக நிதானமாகவே வாகனத்தைக் கொண்டு செல்வேன்'' என்று மில்லர் கூறினான்.

கமல் தன்னுடைய வோக்கியில் ரொக்கட் லோஞ்சர் (R.P.G) வைத்திருந்தவனை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற, ரொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட ரொக்கட் பங்கரைத் தாக்கியது. மணல் மூட்டைகள் சிந்தின. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும், கமல் தகவலைத் தெரிவித்தான். பொறுப்பாளரிடமிருந்து மில்லரை புறப்படுமாறு பிரபாவுக்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை 'ஸ்ராட்' செய்து மெதுவாகச் செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.



வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான். கருவி இயங்கத் தொடங்கிவிட்டது. மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான். பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து, “மில்லர் எப்படியும் திரும்பி வந்துவிடு'' என்று கூற அதை மில்லர் புரிந்துகொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும், வெடி மருந்தையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது.

## கரும்புலி மேஜர் காந்தரூபன்

பெரியம்மா தொடர்ந்து சொன்னார் “கப்பல் அடிக்கிறத்துக்குப் போறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னர் சரியான வெயிலுக்கை வீட்டுக்கு வந்தான். 'தலையிடியாக் கிடக்கு பனடோல் தாங்கோ' என்றான். குடுத்தன். வாங்கிக் குடிச்சான். 'நான் ஒரு முக்கியமான வேலையா வேற ஒரு இடத்துக்குப் போறன் பெரியம்மா' என்றான். வருத்தம் என்று சொல்லுறாயேடா தம்பி... தலைவரிட்ட சொல்லிப் போட்டு நில்லன். இன்னொருதரம் போகலாம் தானே' எண்டு ஆலோசனை சொன்னேன். 'இல்லைப் பெரியம்மா. அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான்... கட்டாயம் நான் தான் அந்த வேலைக்குப் போகோணும்....' என்றான். 'சரிதம்பி... சுகமாய் போய் சுகமாய் திரும்பிவா' எண்டு நான் சொல்ல – அவன் திருப்பிச் சொன்னான் – 'சுகமாய் போவன் பெரியம்மா... அதில பிரச்சினையில்லை.... ஆனா... திரும்பி வாறதென்கிறதுதான்... சரி பாப்பம்... எண்டான்'. அதற்கு மேல் பெரியம்மாவால் பேசமுடியவில்லை. மறுபக்கம் திரும்பி கண்களைத் துடைத்துக்கொண்டார்.

## கரும்புலி கப்டன் வினோத்

வரிப்புலிச் சீருடையில், 'மிலிற்றறி' சப்பாத்துப் போட்டு ஒரு கையில் துப்பாக்கியுடன், மறு கையில் புகைப்படக்கருவி ஒன்றையும் கொண்டு வந்தான். வீட்டில் எல்லோருடனும் சேர்ந்து படம் எடுத்தான். அக்காமாரைக் கட்டிப்பிடித்தபடி.... அக்காமாரின் குழந்தைகளைத் தோளில் வைத்தபடி.... ஆச்சியோடு நின்று... எல்லாவிதமாகவும் படமெடுத்தான்.

“என்னடா புதினமாக இண்டைக்கு எல்லோ

**ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் பொழுதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.**

- தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்

www.tamilarangam.net

ரோடையும் படம் எடுக்கிறாய்?'' அக்கா கேட்டாள்.

"ஒண்டுமில்லையக்கா... நானொரு வேறையாத் தூர இடத்துக்குப் போறன்.... திரும்பி வரமாட்டன்...'' சிரித்துக் கொண்டு சொன்னான்.

அண்ணனின் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு,

"உன்ர சித்தப்பா இனி வரமாட்டன்... இறுக்கிக் கொஞ்சிவிடு..." என்று சொல்லிக் கொஞ்சினான்.

"எங்களுக்கு அது அப்போது அவ்வளவு விளங்கேல்லை.''

வல்வெட்டித்துறையில் கடற்கரையோரமாக அவர்களுடைய வீடு இருந்தது. அங்கு பீரங்கிக் கப்பல்களின் தொடர்ச்சியான தாக்குதல்கள் நிகழும். இதன் காரணமாக, கொடிகாமம் சென்று அங்குள்ள உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்த அம்மாவையும், அப்பாவையும் வினோத் சென்று பார்த்தான். கட்டி அணைத்துக்கொண்டு படம் எடுத்தான்.

அம்மா கேட்டபோது – அக்காவுக்குச் சொன்ன அதே காரணத்தை இங்கேயும் சொன்னான். அவர்களாலும் வித்தியாசமாக எதனையும் உணர முடியவில்லை.

"நேவி அடிக்கிறானெண்டு அலைஞ்சு திரியாதேங்கோ அம்மா... ஊரிலபோய் இருங்கோ... ஒரு நாளைக்கு... எங்கட கடல் எங்களிட்டை வரும்'' என்றும் சொல்லிவிட்டுப் போனான்.

அதன் பிறகு ஒரு நாள் கூடத் தங்களுடைய செல்வத்தைக் காணவில்லை. இனிமேல் காணவும் மாட்டார்கள்.

## கரும்புலி கப்டன் கொலின்ஸ்

"இவன் வெளிநாடு செல்ல விரும்பவில்லை. சொன்னபடி இயக்கத்தில் தான் சேர்ந்தான்' – இது அங்கிருந்த தாயாரின் வார்த்தை. இதைத் தொடர்ந்து மீண்டும் அந்தத் தந்தையார் கூறத்தொடங்கினார்.

"தம்பி இவன் லீவு முடிஞ்சு போறதுக்கு முதல் நாள் தாயைப் பார்த்து, "அம்மா, நான் இயக்க வேலையா ஒரு இடத்துக்குப் போக இருக்கிறன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது – அது நாட்டுக்கு மட்டும்தான்'' என்று சொன்னான் – நாங்கள் அதை அப்ப பெரிசா எடுக்கேல்லை."

## கரும்புலி லெப். கேணல் போர்க்

இந்தத் தாக்குதலுக்குச் சில நாட்களுக்கு முன்பு, போர்க் அண்ணை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றார்.

அவரது கிராமம் சிங்கள எல்லையில் அமைந்துள்ளது. அது வன்னியிலுள்ள 'சேமமடு'.



சிறு வயது தொட்டு நடந்து திரிந்த அக்கிராமத்தில் குளம், வயல், காடு என்ற ஒவ்வொன்றையும் சுற்றி ரசித்தார். இல்லை... அவற்றிடமிருந்து விடைபெற்றார்.

அந்த நாட்களில் ஒருநாள் பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் சென்று ஓர் மரக்குற்றியில் அமர்ந்தவாறு போர்க் அண்ணை கேட்டார் –

"தம்பியவை, மாவீரர் நாள் வருதல்லோ? தற்செயலா நான் செத்துப் போனா அண்டைக்கு என்ன செய்வியள்?''

"நீங்கள் ஏன் சாகப்போறியள்'' எனக் கேலியாகப் பதில் கூறினர் பிள்ளைகள்.

போர்க் அண்ணையும் சிரித்தபடி, "தப்பித் தவறி நான் செத்துப்போனா என்ர நினைவாக ஆளுக்கொரு மரம் நட்டு வளவுங்கோ என்ன?''

அவர்கள் சிரித்தனர். போர்க் அண்ணையும் சேர்ந்து சிரித்தார்.

வீட்டிலிருந்து புறப்படும் இறுதிநாள் வந்தது. மதியம் உணவருந்திவிட்டு விறாந்தையில் பாயைப் போட்டுப் படுத்தார். சற்றுத்தள்ளிப் போர்க் அண்ணையின் அம்மாவும் படுப்பதற்காக, தரையில் பாயைப் போட்டார்.

"அம்மா இதில வந்து, எனக்குப் பக்கத்தில பாயைப் போடணை." போர்க்கண்ணை கேட்டார். அம்மாவும் வந்து அவரின் தலையை வருடியவாறு இருந்தார்.

அன்று பின்னேரம் அப்பா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத் தங்கை என்று எல்லோரிடமும் விடை பெறுகிறார்.

கடைசியாகத் தாயாரிடம் வந்து, "அம்மா எனக்கு உங்கட கையால ஒரு பொட்டு வைச்சு விடுங்கோவன், ஆசையாயிருக்கு'' என சாதாரணமாகக் கேட்டார். ஏதுமறியாத தாயுள்ளம் பிள்ளையின் விருப்பப்படி பொட்டிட்டு மகிழ்ந்தது. இவ்விதம் சிறு பிள்ளைபோல் அவர் நடப்பது வழக்கம் எனத் தாயாரும் கூறினார்.

சிரித்தபடியே விடை பெற்றவர், வீட்டுப் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார். பின் போய்விட்டார்.

## கரும்புலி மேஜர் டாம்போ

"வீட்டில், நாங்கள் எல்லோருமே எங்கவளுடைய ஒரேயொரு தங்கச்சியில் மிகுந்த அன்பு வைச்சிருந்தம்.அவளின் சாமத்திய வீட்டை சொந்தக்காரர் எல்லோருக்கும் சொல்லி வீட்டில் எங்களின் வசதிக்கேற்ற அளவுக்குப் பெரிசாகச் செய்தம்... ஆனால்,

..... சாமத்திய வீடு நடந்து பத்தாம் நாள் தம்பிக்கும் தங்கச்சிக்கும் இடையில் சின்னதாக ஒரு பிரச்சினை. அம்மா தம்பிக்கு அடிச்சுப் போட்டா... தன்னாலதான் அண்ணனுக்கு அடி விழுந்ததென்று நினைத்து... எங்களின் ஆசைத்

www.tamilarangam.net

தங்கச்சி நஞ்சு குடிச்சு உயிரைப் போக்கிக் கொண்டாள்..”

ஒரு கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு – கீழே குனிந்தபடி ஒரு தடிக்குச்சியால் மண்ணைக் கிண்டிக்கொண்டு, டாம்போ சொன்னான்–

“இதற்கிடையில் எங்களின் இன்னொரு தம்பி பயணம் போனவன், கடற்படையால கைது செய்யப்பட்டான். இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இராணுவம் பிடித்துச் செல்கின்ற ஆக்கள் காணாமல் போவதென்பது இங்கு புதினமில்லைத் தானே...

அதுக்குப் பிறகு – தங்கச்சி செத்து ஒரு மாதம் போக முந்தியே தம்பி இயக்கத்திற்கு வந்திட்டான். எங்களுடைய வீட்டு நிலைமையைத் தெரிஞ்சுகொண்ட சுபன் அண்ணை, தம்பியை வீட்டுக்குப் போகச் சொல்லி அனுப்பினபோதும் போகமாட்டன் என்று அடம் பிடித்துக்கொண்டு முகாம் ஒன்றில் நிண்டான்...

பிறகு நான்தான் அவனை மோட்டாப் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வந்து பயிற்சி முகாமில் விட்டன்... இப்ப அவன் அங்கு ஓடித்திரிகிறான்... நான் கரும்புலியாகப் போகப் போகிறேன் என்று அவனுக்குச் சொல்லிப் போட்டன்...” என்ர முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு வேறெங்கோ பார்த்தான்.

மன்னாரில் நடக்கிற முதலாவது கரும்புலித் தாக்குதலை நான் செய்ய வேணுமென்ற ஆசை என்னிடம் இருந்தது... அதை நான் சுபன் அண்ணையிட்டச் சொல்லியிருந்தனான்..... இப்ப அந்த நாளும் வந்திருக்குது...”

கலக்கமில்லாத – மிகத் தெளிவான – கண்களோடு தோழனைப் பார்த்துச் சொன்னான் – “இப்படி ஒரு நிறைவான சாவு எல்லாருக்கும் வராதடா...”

## கரும்புலி கப்டன் சிதம்பரம்
## கரும்புலி கப்டன் ஜெயந்தன்

இக்கப்பலைத் தேடி திசையறி கருவியின் உதவியுடன் கரும்புலிகளின் வெடிமருந்து ஏற்றிய படகு புறப்பட்டது. சிறிது நேரத்தில் வோக்கி மூலம் தொடர்பு கொண்டு கதைத்தார்கள்.

“நாங்கள் கதைக்கிறது விளங்குகிறதா?” எனக் கேட்டோம்,

“நீங்கள்... கதைப்பது... தெளிவாகக்... கேட்கிறது” என எந்தவித சலசலப்புமில்லாமல் உறுதியுடன் அறிவித்தார்கள். மேலும் சில நிமிடங்கள் சென்றன. சிதம்பரமும் – ஜெயந்தனும் சென்ற வெடிமருந்துப் படகு சுமார் 4 மைல் கடந்திருக்கும்.

அப்போது – ‘எங்களுடைய இலக்கைக் கண்டு விட்டோம்’

எங்களுடைய இலக்கைக் கண்டுவிட்டோம்... என உற்சாகம் பொங்க படகிலிருந்து அறிவித்தனர். குரலில் பதட்டமோ அல்லது தயக்கமோ தென்படவேயில்லை – கரையில் நின்ற தோழர்களின் நெஞ்சுதான் பதை பதைத்துக் கொண்டிருந்தது.

மேலும் சில நிமிடங்கள் சென்றிருக்கும்.

‘திட்டமிட்டபடி நாங்கள் செய்யப்போகிறோம்’

‘ஏற்கனவே திட்டமிட்டபடி நாங்கள் செய்யப்போகிறோம்’, என்ற குரல் கடல் இரைச்சலையும் கிழித்துக் கொண்டு எங்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

கரையில் நின்ற போராளிகள் அனைவரும் கண்வெட்டாது கடலையே பார்த்துக்கொண்டு வோக்கிக்கு காதைக் கொடுத்துக் கொண்டு நின்றார்கள்.

அப்போது சிதம்பரமும், ஜெயந்தனும் சேர்ந்து வோக்கி ஊடாக, “புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்” என உரத்துக் கத்தினர்.

# முகம் மறைத்த அந்த மாவீரர்கள்

இப்போது அவனொரு கரும்புலி வீரனாகி —

‘புலிகளை அழிக்கக் கங்கணம் கட்டி நின்ற’ ஒரு இலக்கை அழிக்கத் தயாராகி நின்றான்.

பகைவனின் பிரதான தெருவொன்றில் அந்த இலக்கு, சரிவந்து பொருந்திய ஒரு ‘இளவேனில்’ காலையில் –



தாக்குதலின் இரகசியத் தன்மையையும், அதன் தேவையையும் தெளிவாகப் புரிந்துணர்ந்திருந்த அந்த விடுதலை வீரன்–

கூடவே வந்து நின்று, கட்டியணைத்து வழியனுப்பி வைத்த அந்தத் ‘தளத்தின்’ அதிபதியிடம் காதோடு சொல்லிவிட்டுப் போனானாம்–

“அம்மாவிடம் மட்டும் சொல்லிவிடுங்கோ.... அவ ஒருத்தருக்கும் சொல்லமாட்டா....”

அன்று மாலையோ, அடுத்த காலையோ, அல்லது மறுநாளோ கூட அது நடந்து விடக்கூடும்.

தான் தங்கியிருந்த வீட்டுக்கு அவன் திரும்பிவிட்டிருந்தான்.

அவர்களுக்கு எதுவும் தெரியாது.

மதியச் சாப்பாட்டுக்காக மேசையில் அவனும் வீட்டுக்காரர்களும், அமர்ந்தார்கள். கூடவே அவனது நண்பனொருவனும்.

அம்மா சாப்பாடு பரிமாறும்போது, முட்டை பொரித்துத் தருமாறு கேட்டான்.

ஒன்றுமே பேசாமல் போன அம்மா முட்டையை அரை அரியலாக எடுத்து வந்தாள். “முட்டையைப் பொரித்துத் தரச் சொல்லியல்லோ அம்மா கேட்டனான்... நீங்கள் அவிச்சுக்கொண்டு வாறியள்...”

அந்த அப்பாவி அம்மா சொன்னாள் –

“பொரிச்சா சத்தெல்லாம் போயிடுமடா தம்பி, அதுதான் அவிச்சு வந்தனான். சத்து இருக்கும், உடம்பில சேரும்..... சாப்பிடு.....”

www.tamilarangam.net

அதைத் தொடர்ந்து கடலுக்குள் பெரு வெளிச்சம், சில வினாடிகளில் பெரும் வெடி ஓசையும் கரையை உலுக்கியது.

## கரும்புலி மேஜர் புகழரசன்

புகழரசன் ஒரு நாள் வீட்டிற்கு வந்திருந்தான். உறவினர் ஒருவரும் வந்திருந்தார். ஒரு தந்தைக்கு இயல்பாகவே இருக்கின்ற பிள்ளைப்பாசம் வெளிப்பாடு கண்டபோது – வந்தவர் அப்பாவிடம் சொன்னதை, அப்பா மகனிடம் கேட்டார் – "தம்பி... வெடிபட்டு உனக்குக் காலும் ஏலாது... இனி விட்டிட்டு வந்து... வீட்டோட நிக்கலாம் தானே..." அப்பா இழுக்க, மெல்லிய ஒரு சிரிப்போடு விழிகளை உயர்த்தி, ஓர் அரசியல் மேதையைப் போல அவன் விளக்கினான்.

"இயக்கத்திற்கு போனது, விலத்திக் கொண்டு வாறதுக்கில்லை. நான் போனது நாட்டுக்காகப் போராட..., திரும்பி வீட்டிற்கு வாறதுக்கில்லை. இந்தப் போராட்டத்திலை நான் சாகவும் கூடும். அதைப் பற்றி நான் கவலைப்படவும் இல்லை..." வந்தவரும் அப்பாவும் மௌனித்துப் போனார்கள்.

## கரும்புலி கப்டன் மணியரசன்

அவனுடைய கடைசி நாட்களில் அவன் மிகுந்த உற்சாகமாக இருந்தான்.

தனது முகம் தெரியாத நண்பர்களிடம் வானலைகளினூடாக விடைபெற்றான். அந்தத் தொடர்புச் சாதனத்திடமிருந்தும் விடை பெற்றான்.

கிளாலிக் கடலில் – சிதைந்து போன நிலையிலும் மதன் அதிசயமாய் மிதந்து வந்தபோது, நாங்கள் பக்குவமாய் எடுத்து வந்து துயிலுமில்லத்தில் விதைக்கையில், கண்ணீரோடு மதனுக்கு மண் போட்டான். அந்த நேரத்தில் எனக்கு மண் போடும் பாக்கியம் ஒருவருக்கும் கிடைக்காது என்று நினைத்திருப்பானோ...?

தோரணம் கட்டி, பந்தல் போட்டு – மதனுக்கும் வரதனுக்கும் அஞ்சலி செய்த போது, வீதி வீதியாகத் திரிந்து பார்த்தான். இன்னும் நாலு நாளில் தனக்கும் இப்படித்தான் செய்வினம் என்று நினைத்திருப்பானோ...?

இப்போது அவன் போய் விட்டான். எங்களால் எட்ட முடியாத தொலைவுக்கு. எங்களைக் கிண்டல் செய்து கொண்டிருந்த அந்த அறுவைக்காரன் இப்போது இல்லை. இயக்கம் "பொம்மர்" வாங்கினால் இறக்கி ஓட அந்த "றண்வே"யும் இப்போது இல்லை!

## கரும்புலி கப்டன் திரு

மேலே வானத்துக்கும் பூமிக்கும் இடையில் –

வெகு உல்லாசத்துடன் –

உலங்குவானூர்தி ஒன்று பலாலிப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. அட்டகாசமாய்ச் சிரித்துவிட்டு நவரட்னம் சொன்னான், "இண்டைக்குப் பறக்கிறார். நாளைக்கு நித்திரை கொள்ளப்போகிறார்".



நீண்ட பயணத்திற்குத் தயாராகி சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டு நின்றவர்களிடம் எல்லாரும் வெளிக்கிட்டு விட்டீர்கள் தூரதேசத்திற்குப் போல இருக்கு.

தளபதி சொர்ணம் கேட்க–

கண்களால் புன்னகைத்து ரங்கன் சொன்னான் –

"ஓமோம் கிட்டண்ணையிட்ட, திலீபண்ணை இப்படி நிறைய தெரிஞ்ச ஆக்கள் அங்க இருக்கினம்"

பலாலிப் பெருந்தளத்தின் முன்னணிக் காவலரண்களுக்கு மிகவும் அருகில் எங்கள் தளபதிகளிடம் விடைபெற்றுச் செல்லும் போது நின்று திரும்பி செல்வராசாவிடம், அண்ணமார் கவனமாகப் போங்கோ 'செல்' அடிப்பான் என்று சொல்லிவிட்டுப் போனான் திரு.

## கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தன் தோழிகளிடம், நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரந்தான் சாக வேணும். அப்பதான் திருவிழாவில அம்மா கச்சான் வித்துவந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத் தான் என்ரை மினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சக பெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும், என்று அடிக்கடி சொல்வாளாம். அவளின் தோழிகள் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கயற்கண்ணியின் இந்த வசனம் கல்லிலே செதுக்கியது போலத் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது. எத்தனை தரம் கேட்டாலும் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்கின்றார்கள்.

எல்லாம் தயார்.

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நளாயினி அவர்கள் அங்கயற்கண்ணியிடம், என்னம்மா ஏதாவது சொல்ல நினைக்கின்றாயா? என்று கேட்டார்.

தயக்கமில்லாமல் தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது.

உங்கட அன்பும், அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் இருக்க வேணும்.

தாயை நேசிப்பதையும் விட அதற்கும் மேலாக தலைவரையும், தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும், தாயகத்தையும் நேசிப்பவர்கள் தான் கரும்புலிகள்.

அங்கயற்கண்ணியை கடற்கரை வரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம்வரை வந்து பிரியா விடை கொடுத்தனர் சக போராளிகள்.

www.tamilarangam.net

## கரும்புலி மேஜர் மங்கை

வல்வெட்டித்துறையில் ஆறுமுகசாமி ஐயாவின் 8 செல்வங்களில் இவள் 6–வது குழந்தை.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு இயக்கத்திற்கு வந்தபோது பெரிய வசதி களைத் தூக்கி எறிந்து விட்டுத்தான் அவள் புறப்பட்டாள்.

வீட்டுக்குப் போயிருந்த ஒரு பௌர்ணமி நாளில் முற்றத்தில் அம்மாவின் மடியில் தலை சாய்த்திப் படுத்திருந்த பிள்ளையை ஆசையோடு வருடிவிட்ட அன்னையிடம் –

'அக்காவுக்குப் பத்து இலட்சம் கொடுத்துக் கல்யாணம் செய்து வைச்சநீங்கள்தானே அம்மா. எனக்கு ஐந்து இலட்சம் தாங்கோ இயக்கத்துக்குக் குடுக்க' என்றாளாம்.

★★

சமுத்திர அலைகளின் மீது அவர்கள் விரித்து வைத்திருந்த மரண வலைக்குள் சிலாபத்துறைக் கரையிலிருந்து 15 கடல் மைல் தூரத்தில் விழுந்து சிக்கியது "சாகரவர்த்தனா''.

தலையெடுக்கவிடாத தாக்குதல்.

மரண அடி!

வளைத்துத் தாக்கிய சண்டைப்படகுகள் அதன் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்த முயல, இருண்ட வானில் சன்னங்களின் ஒளிக்கோடுகள்.

கிளாலி ஏரியில் எம்மக்கள் பார்த்த வர்ணயாலங்கள், சிலாபத்துறைக் கடலில் அரங்கேறின.

வேகங்கொண்ட வெடிகொண்ட படகுகள்.

குறுக்கும் நெடுக்கும் பாய்ந்த சன்னங்கள் இலக்கை இனங்காண்பதில் சிக்கலைத் தோற்றுவித்தன.

சரியாகத் தெரியாவிட்டால் இடிபடுவது எங்கள் படகாய்ப் போய்விடும்.

விரையும் படகிலிருந்த நளாயினியின் குரல், உப்புக் காற்றில் அலைவரிசையாகி 'றாடர்' நிலையத்திலிருந்த 'வோக்கி'யில் ஒலித்தது.

"ரெண்டு பக்கமும் வெளிச்சம் தெரியுது. 'ற்றாக்கற்' விளங்குதில்லை சரியான பாகையைச் சொல்லுங்கோ..."

திரும்பத்திரும்ப இதையே கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு துல்லியமான திசை வழியைக் கொடுத்துக்கொண்டேயிருந்தது "றாடர்" நிலையம்.



விசையைப் பெற்றது படகு.

40 நொட்சை கிட்டிய வேகம்.

அலைகள் அடிபணிந்தன.

'வோக்கி' ஒலித்தது.

ற்றாக்கற் தெரியுது.

நல்லாக் கிட்ட வந்திட்டம்.

இடிக்கிறம்...

ஆவேசமான நெருக்கம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

மங்கையும், நளாயினியும்,

மின்னலின் பிரகாசிப்போடு அணியத்தில் மோதிய முழக்கம் கடலில் இரைந்து அடங்கு முன்னர் –

கடையாலில் விழுந்தது அடுத்த இடி!

அது லக்ஸ்மனும், வாமனும்.

ஒரு பக்கமாய்ச், சரிந்து மூழ்கிக் கொண்டிருந்த கப்பலின் மீது, தாவிப் பாய்ந்தனர் கடற்புலிகள். மூர்க்கத்தனமான தாக்குதல்!

துப்பாக்கிகளின் முரட்டுத்தனமான உறுமல்!

"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு" செய்யுள் ஆக்கியவர் பாரதிதாசன்.

செய்து காட்டியவர் பிரபாகரன்.

கடலுக்குள் குதித்துக் கைகளைத் தூக்கியோரை, கப்பலில் எடுத்த பிப்ரி கலிபர்களோடு கரைக்குக் கொண்டுவந்தனர் கடற்புலிகள்.

ஒருவர் கப்பலின் தளபதி. அடுத்தவர் துணைத்தளபதி.

போர்க்கைதியாய் உள்ள கொமாண்டர் சொன்னார்.

எனது 20 வருட படையியல் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாத நிகழ்வு, என் கண்களால் பார்த்த இந்தத் தற்கொடைத் தாக்குதல்தான்.

## கரும்புலி லெப். கேணல் நளாயினி

சண்டை ஆரம்பமானது. நள்ளிரவில் நடுக்கடலில் நட்சத்திரங்களைப் பார்த்து திசையறிந்து கரை சேருகின்ற நளாயினிக்கு அந்த இரவில் தனக்குக் கொடுக்கப்பட்ட இலக்கை இனங்கண்டு கொள்வதில் எந்தச் சிரமமுமே ஏற்படவில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட அரண்களில் சிலவற்றைக் கைப்பற்றி அழித்து அந்த இடையூடாக உதவிக்குழுவை பிரதான தளத்துக்கு அனுப்ப வழிவகை செய்துவிட்டு தொடர்ந்தும் நடந்த சண்டையில் நளாயினி வயிற்றில் காயமடைந்தார். முன்னர் காயப்பட்ட அதே இடம் இம்முறை மிக மோசமாக பாதிப்புக்குள்ளானது. இரத்தக்கசிவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் இருந்தவர் பலத்த முயற்சிகளின் பின் பிழைத்தார். நிமிர்ந்து உட்காரமுடியாத நிலையில் வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருந்தார்.

மாவீரர் நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. தன்னைத் துயிலுமில்லத்துக்கு போக அனுமதிக்குமாறு நச்சரித்துக்கொண்டே இருந்தார். யாருமே பிடிகொடுக்கவில்லை. 1993.11.27 அன்று ஒருவருக்குமே சொல்லாமல் ஒரு காரை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு துயிலுமில்லத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டார். அனைத்துத் தளபதிகளும் பொறுப்பாளர்களும் நளாயினியைக் கோபத்துடன் ஏச,

நான் என்னெண்டு ஆஸ்பத்திரியிலை இருக்கிறது? கண்ணை மூடினாலும் துறந்தாலும் துயிலுமில்லந்தான் தெரியுது. நான் என்ன செய்ய? என்று எல்லோரையும் சமாதானப்படுத்திவிட்டார். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்து நவீன கவிதை மரபில் மூன்று பெண் மாவீரர்களின் பதிவுகள்

ஒவ்வொரு மனிதனது மூச்சும் காலத்தின் மூச்சோடு அசைந்து செல்கிறது. அந்தக் காலத்தின் கண்ணாடியாகி யதார்த்த வாழ்வின் நிஜங்களை நுட்பமாகச் சித்தரித்துக் காட்டும் இலக்கியங்கள் உன்னதமானவை.

அவ்வகையில், ஈழத்து நவீன தமிழ்க்கவிதையின் சமகாலக் கவிதைகளில் பெண் மாவீரர்கள் மூவரின் பங்களிப்பு கவனத்திற்குரியது. போராளிகளாக வாழ்ந்து வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட மேஜர் பாரதி, கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி கவிஞர்களாகவும் பரிணாமம் பெற்றார்கள். இவர்களின் கவிதைகளில் தேச விடுதலையுடன் பெண்ணடக்குமுறை, பெண் விடுதலை, பெண்ணிலை வாதம் தொடர்பான அக்கறையினையும் ஆர்வத்தினையும் காணலாம். இவர்கள் புதிய வீச்சோடும், எழுச்சியோடும் வாழ்வியலை கவிதைகளால் கோர்த்தெடுத்தார்கள். மேஜர் பாரதியின் 'காதோடு சொல்லி விடு' கப்டன் வானதியின் 'வானதியின் கவிதைகள்' கப்டன் கஸ்தூரியின் 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' போன்ற படைப்புக்கள் பெண் போராளிக் கவிஞர்களின் வாழ்வியலில் இருந்து தீட்டப்பட்ட ஓவியங்கள். கப்டன் வானதியின் 'புறப்பட்டு வா...' எனும் கவிதையின் ஆரம்பத்தில்

"ஆணாதிக்கப் புயலால்
அடுப்படியில் அகதியாகி
தீயோடு மௌனயுத்தம் நடத்துபவளே!
புறப்பட்டு வா..." என ஏனைய பெண்களுக்கு அழைப்பு விடுத்த வானதி, "அனிதா நீ ஓர்...." (லெப். அனிதா ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் ஒரு மறை போராளியாக இயங்கியவர். இந்திய




இராணுவத்தின் அடிவருடிகளாக இருந்து செயற்பட்ட E.P.R.L.F. கும்பலினால் களுவாஞ்சிக்குடியில் 28.11.88 அன்று கைதுசெய்யப்பட்டபோது சயனைட் அருந்தி வீரச்சாவினைத் தழுவிக்கொண்டவர்) எனும் கவிதையிறுதியில்,

"சாவு உன்
சரித்திரத்துடன்
சந்தித்துக் கொண்ட
அந்தக் கறுப்பு நாளின்
கடைசி நிமிடத்திலும் கூட,
உன் அபிமானத்தின்
அடையாளத்தை நீ
அறிமுகப்படுத்திவிட்டுத்தான்
அணைந்து போனாய் என்பதை
அறியும் போது
நண்பியே
கடமையின் கட்டளையை
காற்றோடும் கதைத்து
நீ தூது சொன்னதை
புரிந்து கொண்டோம்!
இதோ,
புறப்பட்டு விட்டோம்!!"
என உரத்துப் பாடுகிறாள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் 'மாவீரர்கள்....!' எனும் கவிதையில்

"இவர்கள் வைராக்கிய விருட்சத்தின்
விழுதுகள்!
ஏகாதிபத்தியத்தை ஏப்பம் விட்ட
அக்கினிக் குஞ்சுகள்!"
எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு வானதியின் கவிதைகள் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் பக்கங்களை நிறைத்து நிற்பவை. வீரம், தியாகம், அர்ப்பணிப்பு என்பற்றை அளவிடமுடியாத இலட்சியப்பற்றின் ஆழத்தை இவரின் கவிதைகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

இவ்வாறுதான், மேஜர் பாரதியின் 'காதோடு சொல்லி விடு' கவிதைத்தொகுதியும் அளவிட முடியாத இலட்சியப் பற்றின் நேசத்தினை எமக்கு காட்டி நிற்கின்றன. சத்திய ஆவேசத்துடன் ஆயுதமேந்தி களம்புகுந்த இந்தப் பெண் மாவீரர் தன் மறுகையில் பேனாவினை ஆயுதமாக ஏந்திக்கொண்டாள். அந்த ஆயுதம், பெற்ற

www.tamilarangam.net

தாயிலிருந்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வரை தாவிச்செல்கிறது. தன் கவிதையின் உணர்வு களை தன் உதிரத்தால் வடித்தவர் மேஜர் பாரதி. இவரின் "விடிவிற்காய் எழுவோம்" எனும் கவிதை யின் இறுதியில்,

"குச் சொழுங்கைக் குறுணிகளும்
குவிந்திருக்கும் குண்டுகளாய் மாற
தீர்மானம் எடுக்கும்
குருதிச் சேற்றில்
பதியும் என் கால்கள்
குறிக்கோளை நோக்கி
விரைந்தோடும்
நினைவுகளைத் தாங்கும்
என் விழிகள்
அடுத்த விடியலுக்காய்
காத்திருக்கும்" எனக் குறிப்பிடுகிறார்.

மேஜர் பாரதியின் படிமங்கள் புதுமையானது மட்டுமல்ல வியப்பும் பிரமிப்பும் தருபவை. தனது "பூபதிக்கோள்'' எனும் கவிதையில்


"சுதந்திர நாடுகள்
மனித உரிமையின்
மகத்துவம் பற்றியும்
பேசிக்கொள்கையில்
அங்கீகரிக்கப்படாத
என் தேசமோ
பூபதி என்ற
புதிய கோளினை
தியாகச் சுடராய்
திரண்டெழச் செய்தது" என்று குறிப்பிட்டு

அன்னை பூபதியை தமிழினம் விண்வெளியில் ஏவிய ஒரு கோளாகக் காண்கிறார். அவரின் அதே கவிதையில்,

"பாரதக் கொடி
பறந்து கொண்டிருந்த
உச்சிக் கம்பத்தில்
உரிமை கேட்ட
ஈழத் தமிழரின்
சதைகள் கொத்திய
கழுகுகள் இருந்து
அலகுகள் சொறிந்தன" எனக் குறிப்பிடுவத

னூடாக இந்திய வல்லாதிக்கத்தின் முகமூடியைக் கிழித்துக் காட்டுகிறார்.

மேஜர் பாரதி எலும்புக்கூடாய் உலவும் தன் அம்மாவுக்கும் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். "அன்பான அம்மா'' எனும் அந்தக் கவிதையை படிக்கின்றபோது நெஞ்சு கசிவதை எம்மால் உணரமுடிகிறது. அக்கவிதையின் இறுதியில்,




"நாளை திரும்பி வரா
உன் மகளை எண்ணி
நீ கவலைப்படாதே
என் மறைவின் பின்னர்
புதிய தோழர்கள்
அந்த வைகறைக்காய்
புறப்படுவார்கள்.

அதற்கு முன்னால்
அவர்கள் உன்னிடம் வரலாம்
அப்போது அவர்களில்
புதிய சீருடையில்
புதிய துப்பாக்கியில்
இனிய முகங்களில்
என்னைப் பார்"

எனக் குறிப்பிடும்போது அவரின் உறுதி யினை நாம் தெளிவாகக் காணலாம்.

இன்னொரு சந்தர்ப்பத்தில்,

"தேசப்படத்தில்
எங்கள் தேசத்தை
தேடிப்பார்ப்போம். இல்லாவிட்டால்
குருதிமையினால்
குறித்துக் காட்டுவோம்" என்கிறார்.

இவ்வாறு உறுதியுடன் எழுகின்ற ஒரு இனத் தின் புதிய போக்கைக் குறிப்பிட்டுக் காட்ட மேஜர் பாரதி போன்றோரால்த்தான் முடியும்.

மொத்தத்தில் எங்கள் மனதோடு பேசுகின்ற பாரதியின் இந்தத்தொகுப்பு அவரின் உறுதியி னையும் பார்வையினையும் எமக்கு விசாலப் படுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தன் பங்களிப் பைத் திருப்திகரமாகச் செய்யவில்லை என்ற அவரின் ஆதங்கம் "ஐ. நா. சபையே....'' என்ற அவரின் கவிதையில்,

"உலக சமாதானம்
இந்த
உன்னத கோட்பாட்டிற்குள்
தலையைப் புதைக்கும்
தீக்கோழி நீ
முகம் தெரியாவிட்டாலும்
சீ.....
முழு உடலும்
அம்மணமாய்த் தெரிகிறது" எனக் குறிப்பிடு

வதனூடாக வெளிப்படுகிறது. இவ்வாறு புதிய படிமங்களுக்கூடாக மேஜர் பாரதி புரட்சியுகத் தின் புதிய கவிதை இலக்கியத்திற்கு மெருகூட்டு கிறார். இப்படி பாரதியின் ஒவ்வொரு கவிதை பற்றியும், அதில் பொதிந்துள்ள பொருள் பற்றி யும் நாம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்தப் புரட்சியுகத்தின் ஒப்பற்ற கவிஞர்க ளான மாவீரர் மேஜர் பாரதி, கப்டன் வானதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோடு நாம் கப்டன் கஸ்தூரியையும் இணைத்துக் கொள்ளலாம். தனது கவிதைகளில் முழு உலகிற்குமான மானுட வாழ்வின் அவலங்களை, தேவைகளை, துயரங்களை அநீதிகளை ஆவேசத்துடன் எதிர்த்தவர் கஸ்தூரி. உண்மையும், சத்தியமும் நிறைந்தவை இவரது கவிதைகள் தனது கவிதைகளுக்கூடாகவும், செயல்களுக்கூடாகவும் பல யுகங்களுக்கு வாழப் போகிறவர் இவர், "விடுதலை நெருப்பே'' என்ற அன்னை பூபதி பற்றிய தனது,

"காற்றுக்குள் உன்னை
காண்கிறது காலம்
தண்ணீருக்குள்ளே
தழுவுகிறது தமிழ்
உணர்கிறது உரிமை" எனக் குறிப்பிட்டு

அன்னை பூபதியின் நினைவுகளை மீட்டுகிறார். காற்றும் தண்ணீரும் உணவுமின்றி மனிதன் ஜீவிக்க முடியுமா? இல்லை. மனிதவாழ்வுக்கு அத்தியாவசியமான ஒவ்வொரு பொருளிலும் அன்னை பூபதியை அவர் காணுகின்றபோது அவரால் அன்னை பூபதியை எப்படி மறக்கமுடியும்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் மலையக மக்களின் விடுதலை பற்றி "கொழுந்துக் கூடைகள்'' என்ற அவரின் கவிதை பேசுகிறது.

"சரண்டல்" தராசுகளில்
கொழுந்துக் கூடைகளை
கொழுவி விட்டு
தேனீருக்காக ஏங்கும் இத்
தேயிலைச் செடிகள்....
அக்கினியால் அணிவகுத்து
அவலங்களை எரிப்பதெந்நாள்?"

உண்மையான விடுதலையை நேசிக்கும் ஒருவராற்தான் இத்தகைய கேள்வியை எழுப்ப முடியும். மலையக மக்களின் துயரநிலை போக்கி அவர்கள் சுபீட்சமான ஒரு வாழ்வினை அனுபவிக்க வேண்டும் என்ற ஆத்மார்த்த உணர்வினாற்தான் அவரால் "அக்கினிக் குஞ்சுகள்'' படைக்கமுடிந்தது.

விடுதலைக்காக விலைமதிக்க முடியாத பல மனித உயிர்கள் சாவினைத் தழுவிக்கொள்வதினையும், அதில் தானும் ஒருவராக இருந்ததையும் உணர்ந்த "விண்ணுலக வேங்கைக்கு'' எனும் தனது கவிதையில்

"நாளைய தேசியக்கொடியின்
வருகைக்காக
இன்று காற்றில் பறக்கும்




கறுப்புக் கொடிகளே அதிகம்" எனக் குறிப்பிட்டு பிறிதொருசந்தர்ப்பத்தில் "சுதந்திரமே...'' எனும் கவிதையில்,

"சுதந்திரமே...
உன்னோடு
சொந்தம் கொண்டாடப்
புறப்பட்டதால்,
சாவு இங்கே
சாதாரண விலைக்கு
வந்துவிட்டது" என்று குறிப்பிட்டுக் காட்டுவதனூடாக தன்னை அறிமுகப்படுத்திய கஸ்தூரி, ஒவ்வொரு மாவீரனுக்கும் பின்னாலும் இன்னொரு... இல்லை, ஆயிரம் போராளிகள் உருவாக்கப்படுகிறார்கள் என்பதினை "விண்ணுலக வேங்கைக்கு'' எனும் கவிதையில்

"ஒருவன் உன்னிடம் வருகையில்
ஓராயிரம் பேர் எம்மிடம் வருகின்றனர்"

எனக் குறிப்பிடுவதனூடாக ஒவ்வொரு மாவீரனும் ஒவ்வொரு வித்து என சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு நிறையவே குறிப்பிடலாம். கப்டன் கஸ்தூரி, கப்டன் வானதி, மேஜர் பாரதி ஆகியோர் அரசியல் எழுச்சியும் கலாச்சார விழிப்புணர்வும் இருக்கிற சூழ்நிலையில் பிரக்ஞை பூர்வமாக கவிதை படைத்தார்கள். இந்தக் கவிதைகளினூடாக இந்தப் பெண்போராளிகளின் ஆத்மார்த்த உணர்வுகளை நாம் நெருக்கமாக நின்று தரிசிக்க முடியும்.

1960—களிலிருந்து ஈழத்து தமிழ் இலக்கியம் பல்வேறு துறைகளிலும் வேகமாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. ஈழத்தின் அரசியற் போக்குகளும் அவற்றின் பன்முனைப்பான விளைகளும் இலக்கியத்திற்கும், அரசியலுக்கும், சமூக வளர்ச்சிக்குமிடையிலான தொடர்புகள் உணரப்படத் தொடங்கின. இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் காத்திரமான படைப்புக்கள் வெளிவரத் தொடங்கின. இவை ஈழத்து தமிழ் கவிதை மரபிலும் புதிய உத்வேகங்களை தோற்றுவித்தன. பழைய கவிஞர்கள் புதிய வீச்சோடு எழுதி வந்தமையோடு, புதியவர்களும் சத்திய ஆவேசத்தோடு எழுதத் தொடங்கினார்கள். அவர்கள், நாங்கள் வாழும் சமுதாயத்தை நேரிடையாகத் தரிசித்து கவிதை படைத்தார்கள். அப்படி காலத்தால் போராளிகளாக உருவாக்கப்பட்டு ஒருகையில் துப்பாக்கியையும், மறுபுறம் கவிஞராகி மறுகையில் பேனாவினையும் தூக்கிய பெண் மாவீரர்கள்தான் மேஜர் பாரதி, கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி ஆவர். ஒரு போராளியாக, ஒரு கவிஞனாக, ஒரு தியாகியாக, ஒரு தீர்க்கதரிசியாக, ஒரு விடிவெள்ளியாக வாழ்ந்து சாவினைத் தழுவிக் கொண்ட இவர்களும், இவர்களது இலக்கியமும் கௌரவிக்கப்பட வேண்டும்.

— வர்மன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மானம் காக்கும் மாவீரரே

மாவீரரே.. நமது
மானம் காப்பவரே.. தமிழ்
காப்பியங்கள் காட்டும்
காவலர்களே!
இலக்கிய வடிவான
இணையற்ற தியாகிகளே!
கலங்கரை விளக்கமாய்..
வழிகாட்டி நிற்கும்
காவல் தெய்வங்களே!

நாம் என்றும் உம்மை
மறக்க வில்லை.
நிம்மதியாய் இன்னும்
தூங்கவில்லை..
மண்ணுக்குள்
புதைக்கவில்லை..
எண்ணத்தில் உங்களை
விதைத்துள்ளோம்!

வீரரே! விடி வெள்ளிகளே!
போரிலே நீங்கள் சிந்திய
குருதியில்..
குளிப்பாட்டப்பட்ட
புழுதியில் பிறந்தவர்கள்..
நாங்கள்..
இருந்தும்
கோழைகள் ஆனால்
கொடியவர்களல்ல..
விடியலை நோக்கி
காத்திருக்கும்
வெளிநாட்டு
அகதிகள்..
வெள்ளையனிடம்..
கையேந்தி நிற்கும்..
பிச்சைக்காரர்கள்..

நீங்கள் எங்களைப் போல
சாதாரண மனிதரல்ல..
அநீதியைக் கண்டு
கொதித்தெழுந்தவர்கள்..
அக்கிரமத்தைக் களைய

ஆணையெடுத்தவர்கள்..
கொல்ல வந்த
பகைவனிடமே
பாசுபதாஸ்திரத்தை
பறித்தெடுத்தவர்கள்..

புத்த பகவானின்
போதனையை
பலியிட்ட பக்தர்களுக்கு
புத்தி புகட்டியவர்கள்..
தமிழனின் குருதியை
காவியில் துடைத்தோரை
துடை நடுங்க வைத்தவர்கள்!
சிங்கத்தைத் துரத்தி
சரித்திரம் கண்ட
வேங்கைகள்!



இந்திய மண்ணுக்கு
இழுக்குத் தந்தவரை..
திலீபனின் தியாகத்தை
புரியாத புல்லரை
புறமுதுகு காட்டி
ஓடவைத்தவர்கள்..
பாரதி கண்ட
புதுமைப் பெண்களை..
நேரிலே தந்தவர்கள்!

பகவான்
தோன்றுவாராம்..
பாரதம் பகர்கிறது..
யேசு
அவதரிப்பாராம்..
பைபிள்..
சொல்கிறது.. எப்போது..?
மனித இனம்
முற்றாக
அழிந்ததன்
பிற்பாடா?
அக்கரமம் அதிகரித்த
போது..
அவதரித்தீர்.. பகவானல்ல
பைந்தமிழ் வீரரே..
நீங்கள் தான்..!

சொந்த நாட்டில்
அகதிகளாம்
பிறந்த மண்ணில்
பட்டினியாம்
காடுகளில்..
குடியிருப்பாம்
கன்னிப்பெண்கள்..
கற்பழிப்பாம்
காளையர்களைக்
காணவில்லையாம்..

காவலுக்குப்
பெற்றோரில்லை..
கணவனுக்குக்
காலில்லை..
பூப்படைந்தவளுக்கு..
பாற் சோறில்லை..
பூச்சூடியவளுக்கு..
பாய்விரிக்க..
வழியில்லை..
பிள்ளைத் தாய்ச்சிக்கு..
போதிய போசாக்கில்லை..
பெற்ற பிள்ளைக்கு
பாலில்லை!

பசிக்கு உணவில்லை.
சரிந்து படுக்க
பாயில்லை..
சற்றுக் கண்மூட..
தரையில்லை..
இதைவிடக்
கொடுமையுண்டா?

ஆண்டவனே.. நீயும்
ஒளிந்து கொண்டு
விட்டாயா?
உன் கையில்
சூலமிருந்ததால்..
ஒரு வேளை.. நீயும்
பயங்கரவாதியென..
பெயர் சூட்டப்பட்டு
விட்டாயோ?
கல்லுக்குள் ஈரம்
என்பார்கள்..
அந்தக் கல்லுக்குள்
கூட.. இன்று.. உன்னைக்
காணவில்லையே!

உடன் பிறப்புக்களே!
உன்னத வீரர்களே!

– பாலன்
அமெரிக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனக்காக?

மின்னலாக அவன் பார்வை என்னுள் இறங்கியது. விழிச்சிறகுகள் பரிதவிக்க, தண்ணீரில் மூழ்கி எழுந்தாற்போல் மூச்சுத் திணறியது.

முன்பொருபோதும் கிடைத்தற்கரிய பரவசம் அது. சிலுசிலுவென மழைத்துளிகள் முகத்தில் படும்போது கிடைக்குமே ஒரு சுகம் அதனை ஒத்ததாக ஆனந்தம், அதிர்ச்சி, அற்புதம் எல்லாமே ஒன்றாகக் கலந்து எப்படி வந்தது இந்த அரிய நிகழ்வு?

கனவுகள் மின்னும் விழிகளில் சந்தோசம் கொப்பளிக்கும். எதிரில் வருவோர் எல்லோரையும் விழியாலே எறிந்து கலைக்க முடியும். அந்தக் கணத்தில் அவர்களிடம் ஏற்படும் அதிர்வுகளை ரசிக்கும் பருவம் அது.

கனவும் நனவும் எதுவென்று புரியாத அந்தப் பருவத்தில்தான் அந்த அனுபவம் கிடைத்தது.

எப்படி நடந்தது அது? என்னுள் வியாபித்து, என்னைக் கசிய வைத்து, நெக்குற பண்ணிய அந்த அதி அற்புதமான மாற்றம் உருப்பெற்றது.

வானம் கறுத்து குளிர்காற்று உருக்கொண்டு உடுக்கடித்துக் கொண்டிருந்த அந்த வேளை 'ரியூசன்' முடிந்து, சைக்கிளில் ஒரு வண்ணத்து இளவரசியாக மிதந்தபோதுதான் சூழலின் மாற்றம் புரிந்தது.

கூட வந்த புவனா சந்தியில் திரும்ப, என் வீடு நோக்கிய பாதையால் இறங்கிய போது எதிர்ப்புறம் பதைபதைத்தபடி ஆட்கள்.

கனவுகள் கலைந்து வானத்தில் இருந்து தரைக்கு விழவேண்டியதாயிற்று.

"என்ரை அம்மாளே" என்ன நடந்தது. அதிர்வுகளுடன் காதில் விழுந்த 'ஷெல்'களின் ஓசை நடப்பதைப் புரியவைத்தது.

கால் இயலாமல் படுக்கையாகப் படுத்திருக்கும் அப்பா என்ன செய்வார். அம்மா என்ன கஷ்டப்படுவாள். வீட்டில் அண்ணாவும் தம்பியும் நிற்பார்களா?

தொடர்கணைகளாக கேள்விகள் மனதில் உருவாக பொலபொலவென கண்ணீர் பெருக ஆரம்பித்தது. 'சைக்கிள்' தள்ளாடியது.

"சித்திரா'' என்று காதருகே ஒரு குரல். திரும்பினால் அண்ணா. "வீட்டில ஆர் அண்ணை? தம்பி நிற்பானே. அப்பா என்ன செய்யிறாரோ?'' அண்ணாவைக் கண்ட சந்தோசத்தை விட வீட்டு நிலைமை மனத்தை உறுத்தியது.

"தம்பியும் இருக்க மாட்டான்" என்று அண்ணா சொல்வதற்கு முன்னர்,

"ஐயோ அண்ணை அப்பா என்ன செய்வார்" என்று நடுங்கிப் போனேன்.

"அக்கம் பக்கத்தில இருக்கிற ஆக்கள் ஆரும் உதவி செய்வினம் சித்திரா" என்று அண்ணா சொன்னாலும், அதில் ஆற்றாமையும் கவலையும் திரண்டு வெளிப்பட்டன.

துயரம் வெடித்துச் சிதறும் முகங்களுடன் வரும் சனங்களை விலத்திக் கொண்டு விரைய, சத்தங்களின் அதிர்வுகள் மனத்தின் அதிர்வை விட மிக அதிகமாகக் கேட்கத் தொடங்கின.

இருந்தாற்போல –

"சித்திரா'' என்றது அந்தக் குரல்.

இத்தனை வருடங்களாக என் காதில் புகுந்து என்னுள் தீர்க்கமற நிறைந்திருக்கும் அந்தக் குரல்.

'சைக்கிள்' நிற்கவில்லை. சரிந்தது. அண்ணாவினதும் என்னுடையதும் சைக்கிள்கள் சிக்கிக் கொண்டு மோதி கால்களில் சிராய்ப்புக் காயங்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஓடினேன்.

வீதியோரமாக மரத்தடியில் அப்பா தனித்திருக்கவில்லை. மடித்துப் போட்ட சாக்கில் கால்களை நீட்டியபடி வழக்கமான கம்பீரத்துடன், வாடிப்போன முகத்தில் வில்லங்கமாக வரவழைத்த சிரிப்புடன்.



'என்ன பிள்ளை' என்ற குரலின் கனிவு என்னை நிலைகுலைய வைத்தது.

"ஐயோ அப்பா எப்படியப்பா வந்தனியள், அம்மா எங்கை?"

"அவசரப்படாத பிள்ளை! அம்மா சுரேசோடை வாறா ஒரு பிரச்சனையுமில்லை. எனக்கு கொஞ்ச நேரம் ஆறுதல் தேவைப்பட்டது. அதுதான் இருந்தனான். கன நேரம் சைக்கிளில இருக்கேலாது" என்றார் அப்பா.

"ஐயோ அப்பா ஆரோடை சைக்கிளில வந்தனீங்கள்" மீண்டும் கேள்வியால் அப்பாவைத் துளைக்க, அப்பா கை காட்டினார். கைகாட்டிய திசையில் நிறுத்தி வைக்கப்பட்ட பெரிய 'கரியர்' சைக்கிளுடன் அவன் நின்று கொண்டிருந்தான்.

இப்போது நினைத்தாலும் பசுமை மாறாத அந்தக் காட்சி இனிமை தர மறப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில்லை. எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் அதிகாலை வேளையில் அம்மன் கோயிலுக்குப் போனால் கிடைக்குமே ஒரு ஆறுதல் – அமைதி – அது போன்ற ஒரு சுகம் அப்போது கிடைத்தது.

அவன் விழிகளில் கொப்பளித்த பரவசம் — பார்வையில் கூர்மை. அவனின் முகத்தில் துளிர்த்த புன்னகை. உதட்டோரம் ராஜகளை கட்டியிருந்த மீசை — எதை எதைச் சொல்ல — எல்லாமே —

அன்றுதான் ஆரம்பமா? என் அம்மாளே எனக்கு என்ன நடந்தது?

❏ ❏ ❏

சிங்களத்தின் ஆக்கிரமிப்பு உச்சமாகி சொத்திழந்து நாடோடிக் கும்பல்களாக யாழ்ப்பாணத்தை விட்டு வன்னி யாத்திரை புறப்பட்டோம்.

தலையில் உரப்பை சுமை என்பதே தமிழரின் அடையாளம் என்கின்ற ஒரு காலப்பதிவில் உரப்பைகள், சூட்கேசுகள் சகிதம் நாங்களும் வன்னி நகர்ந்தோம்.

அந்தப் பயணமும் இனிமையானதுதான். உடல் களைக்க மனம் களைக்க தாகமும் பசியும் இணைந்து இம்சைப்படுத்த கிளாலிக் கடற்கரையில் படகுக்காகக் காத்திருந்து கடலையும் வானத்தையும் மாறி மாறிப் பார்த்தோம் விம்மும் நெஞ்சுடன்.

மாலை கனிந்து இரவு வந்தது. கடலும் வானமும் சங்கமித்து களி நடனம் புரியும் அந்த எல்லையில் முழுப்புன்னகையாக நிலவு தோன்றியது. செங்கட்டிச் சிவப்பாக கடல் பளபளத்தது. எந்தவிதமான மனக்குறையும் இல்லாமல் அது போதையைத் தந்தது.

தொடுவைப் படகுகளில் ஏறத் தயாரானோம். விம்மலுடன் அம்மா வெடித்துக் கிளர்ந்த போது வழக்கமான இதம் கலந்த புன்னகையுடன் அப்பா, அம்மாவின் தலை

இணுவையூர்

**சிதம்பர திருச்செந்தில்நாதன்**

# கண்ணீர் கரை உடைக்கும்

அந்தி வானமும் அழுது விழி சொரிந்து
கன்னஞ் சிவந்து களையின்றி போகும்
கொன்றையும் முல்லையும் வாடா மல்லியும்
போன வீரருக்காய் பூச்சொரிந்தாடும்
நேற்று வரை எம் நேர்வந்த வீரர்
நீள்துயில் கொள்ளுமொரு கல்லறை அருகில்
ஏற்றிய சுடரை இருகை பற்றிட
கடைவிழிக் கண்ணீர் கரை உடைக்கும்

கந்தகம் கட்டிய சந்தன மேனிகள்
இதழ்ப்பூ விரிந்ததே இனியவர் எங்கே
கண்ணி நிலம் தாண்டி காவலரண் தேடி
எண்ணிப் பகைமுடிக்க எழுந்தவர் எங்கே
உப்புக் காற்றலையில் உழுத கடல் களம் நோக்கி
உயிர்ப்பூ விதைத்த உத்தமர் எங்கே
வேவு பெறச் சென்ற வேங்கை புலிவீரர்
உறங்காத கண்மணிகள் எங்கே எங்கே

அன்னை மண்மீட்க வீசிய புயல்கள்
ஆறடிக் குழியில் அடங்கிடக் கூடுமோ
கைக்கு கிட்டாத காவலர் திருமேனி
காற்றிலும் கடலிலும் கலந்திட தாங்குமோ
இரங்கற் பாக்களும் இருவிழி நீரும்
இயம்பிடக்கூடுமோ இளையவர் ஈகையை
அழியா உறுதியும் எம் அயரா உழைப்புமே
அடங்கிய தோழரை அமைதிப்படுத்தும்



- சோதியா

www.tamilarangam.net

# நானும் என் பூவரசும்

— சுபாஸ் —

கன்னங்கரிய இருளில்
புதைந்து
பூவரசே!
காற்றோடும் நீ பேசுகின்ற
கதை தான் என்ன?

கரிய உன் சடை
விரித்து
கதறி அழுகின்ற - உன்
கதையை எனக்கு சொல்ல மாட்டாயா?

கனவுகளின் மீதும்
காற்றாடும் சிறு பொழுது தன்னிலும்
ஏங்கிட வைக்கின்ற
காதலை
என் நெஞ்சுள்
எப்படிப் புதைத்தாய்?

என்னவளின் முதல் எழுத்தும்
என் பெயரின் முதல் எழுத்தும் - உன்
முதுகில்
பொறித்தேன்
வாழியென்றாய்!

தாழ்ந்த நின் சடை
பூமியில் நிழலாய் விழ
தணிந்த மாலைப் பொழுது
தன்னில்
முதுகைச் சாய்த்து
முடிவிலா வெளியைப் பற்றிக்
கலந்திருந்த உறவின் பிரிவால்
உழல்வது நீ மட்டுமா?

துடி துடித்து ஆவி சோர
துவழ்கின்ற இரவின்
வலிய துயரை
எப்படி உரைப்பேன்?
போக்கறுந்த வாழ்வின் பொருள்
உணர்த்தி
காற்றில் - நீ
கரும் சடை விரித்து அழுகின்ற
கதையை
காற்று ஏந்தி வந்தென்
எதிரே திரிகின்றது.

நோக்கி, நோக்கி - என்
நுண்ணறிவைத் துளைத்துத்
துளைத்து
நோவுறச் செய்யும்
போக்கினால் என்னைப்
பொழிந்து, பொழிந்து
காத்திடத் துடிக்கும்
கருணைப் பெருக்கே வாழ்கிறது.

நிழலாய்
காற்றாய்
தயவாய்
தணிவாய்
புயலாய்
வீச்சாய்
மூச்சாய்
வீசுவதென்னவோ - என்
உள வெளி தன்னுள் தினமும்
ஒலிக்கிறது.

நீ மட்டும்
கரிய இருளில் புதைந்து
கலங்கியழுவதாய்
எண்ணாதே
என் பூவரசே!



யைத்தடவி 'அழாதையப்பா — எல்லாம் நல்ல படியாய் முடியும். நாங்கள் மாத்திரமே எங்கள் மண்ணை விட்டிட்டுப் போறம் எல்லாரும் தானே. இண்டைக்கு ஏன் போறம் இந்த மண் எங்களுக்கு நிரந்தரமாக வரவேண்டும் எண்ட துக்காகத்தானே".

அண்ணாவும் தம்பியும் வாடித் துவண்ட முகங்களுடன் படகேறத் தயார் செய்ய முனைந் தார்கள்.

அந்தச் சமயத்தில்தான் அவன் வந்தான். தோளில் கொழுவிய சிறிய தோல்பை — எப் போதும் போலவே மின்னும் விழிகள். கூர்மை யான பார்வை.

என் சோர்வும் தளர்வும் கிளாலிக் கரை யோடு கரை ஒதுங்கிக் கொண்டன. உற்சாகம் திமிறும் பார்வைகளுடன் அவன் விழிளைப் பந்தாட முனைந்தேன்.

நிலவு நனைக்கும் கடல் ஊடாக எங்கள் படகுத் தொடர் புறப்பட்டது. இஞ்சின் படகி லிருந்து ஆறாவதுதான் எங்களது படகு.

படகின் அணியத்தில் அவன் அமர்ந்தான். அணியத்தின் அருகே பலகை இருக்கையில் மனம் சந்தோச நுரைகட்ட நான் அமர்ந்தேன்.

நிலவில் அவன் விழிகள் பளபளத்தன. அப் பளபளப்பில் நான் என்னை இழந்தேன். தீராத தண்ணீர் விடாயினால் தண்ணீர் பருகுவது போல பார்வையால் பருகத் தொடங்கினான். அவனது கூர்மையான பார்வை என்னைத் துளைக்கும் போதெல்லாம் உடலில் ஏற்பட்ட அதிர்வுகளை நான் உணர்ந்தேன். அவன் எனக் காகவே அந்தப் படகில் வருகிறான் என்ற எண் ணம் என்னுள் எழுந்தது.

❑.❑ ❑

கிளிநொச்சி திருவையாற்றில் குடியமர்ந்து இயற்கையின் வனப்புடன் சங்கமமாகி வாழத் தொடங்க சூழல் இயைந்து வந்தது.

அதிகாலைப் பொழுதில் காதில் இசையாய் விழும் குருவிகளின் சப்த ஜாலங்களுடன் கண் விழிக்கும்போதும் மாலை மயக்கத்தில் போதை தரும் உயர்ந்த காட்டு மரங்களின் அசைவும் மனத்தை மயக்கும்.

www.tamilarangam.net

எல்லாவற்றையும் விட அவனது வருகை பெருமயக்கத்தைத் தரும். எப்போதாவது மாலை வேளைகளில் அவன் வருவான்.

அகமகிழ்வோடு அவனை வரவேற்கும் அப்பாவோடு அவன் ஐக்கியமானான். என்னை மட்டும் இடையிடையே விழிகளால் தரிசிப்பான். தந்தியடித்தாற்போலதான் எப்போதாவது பேசுவான்.

அப்பாவைச்சாட்டி எனக்காத்தான் அவன் வருகிறான் என்பதை நான் உணர்ந்தேன். ஒரு தடவை பேச்சோடு பேச்சாக வெளிநாட்டிலுள்ள அண்ணா அவனை வரச்சொல்லி அழைத்ததாகவும் அதற்குத் தான் மறுத்துவிட்டதையும் அப்பாவுக்குத்தான் சொன்னான்.

அவன் அதனைச் சொல்லும் போது வீட்டின் திண்ணையில் இருந்து நான் தைத்துக் கொண்டிருந்தேன். சொல்லிமுடித்தவன் சட்டென்று என்னைப் பார்த்தான். பட்டென்று தீப்பிடித்தாற்போல அவன் பார்வை என்னைக் கவ்விக்கொண்டது.

அதீத ஆனந்தத்தால் என் மனம் நிரம்பி இரணைமடு குள வாய்க்காலால் பாயும் தண்ணீர் போல பாயத்தொடங்கியது.

❏ ❏ ❏

நாங்கள் இப்போது மாங்குளம் குடிவந்துவிட்டோம். திருவையாற்றில் தாராளமாகக் கிடைத்த தண்ணீர் மாங்குளத்தில் வரண்டது போலவே அவன் வருகையும் குறைந்திருந்தது. முன்பு இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை என்றால் இப்போது வாரம் ஒரு தடவை.

முழு வாளியைக் கிணற்றுக்குள் விட்டால் காவாளித் தண்ணீர் மண்ணோடு வரும். அதனை அள்ளக்கூட கியூவில் ஆட்கள் நிற்பார்கள்.

அப்படித்தான் ஒருநாள் அள்ளிக் கொண்டு நிமிர்ந்தேன். தண்ணீர் அள்ளக் காத்திருக்கும் கூட்டத்துடன் அவன். விழிகளில் வியப்பு மின்ன புன்னகைத்து 'எப்ப வந்தது?' என்று பார்வையாலே கேட்க அவன் பதில் சொல்லாமலே சிரித்தான்.

அவன் குடும்பத்தவர்கள் யாழ்ப்பாணம் போகப் புறப்பட்டு விட்டார்களாம். அவர்களை வழியனுப்ப ஓமந்தை போவதாகவும் அவன் சொன்னான்.

"அப்ப நீங்கள்" நெஞ்சைக் கிளித்த அந்தக் கேள்வி என்னுள் எழ முன்னரே அவன் பதில் சொன்னான் 'நான் போகவில்லை' என்று.

அவன் எனக்காகத்தான் வீட்டாட்களுடன் யாழ்ப்பாணம் போகாமல் இங்கேயே நிற்கிறான் என என் உள் மனம் சொன்னபோது மூச்சு முட்டியது.

❏ ❏ ❏

புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம் போல ஒரு சுவாத்தியம் என்று யாரோ சென்னது உண்மை மாதிரித்தான் தெரிந்தது.

எந்த வெக்கையாக இருந்தாலும் தென்னை மர நிழலில் அது பஞ்சாகிவிடும். காற்றாட தென்னை மரத்தடியில் அமர்வதும், வட்டமாக கூடியிருந்து கதைப்பதும் வழக்கமானது.

நாங்கள் குடியிருக்க வந்த முதற்கிழமை அவன் வீட்டுக்கு வந்திருந்தான். அம்மாவின் வற்புறுத்தலுக்குப் பின் சாப்பிட்டுவிட்டு எல்லோரும் தென்னைமரங்களின் கீழ் உதிர்ந்தோம்.



வழக்கத்தைவிட அன்று அவன் சிரித்துக் கதைத்தான். அடிக்கடி என்னை விழிகளால் துளாவி என்னைக் கிறங்கச் செய்தான். விடைபெற்றுப் போகும்போது எப்போதும் போல அல்லாமல் தனித்தனியே போட்டுவாறன் என்று சொன்னான்.

அம்மா கூட "என்னடா இது புதினம்" என்று அவனிடம் கேட்க, பதில் சொல்லாமல் தவித்தான்.

கடைசியாகத்தான் அவன் என்னைப் பார்த்தான். விழிகள் முன்னர் எப்போதும் இல்லாததைவிட பிரகாசமாக இருந்தது. சற்றுநேரம் அவன் உதடுகள் துடித்தன. எனினும் அவன் சொன்ன வார்த்தைகள் "போட்டுவாறன்" என்பதுதான். அதனைவிட புதினமாக அவன் எதையுமே சொல்லவில்லை.

❏ ❏ ❏

அதற்குப்பிறகு நான் அவனை எங்குமே சந்திக்கவில்லை. அப்பாவும் அவனைத் தேடிக் கொண்டிருந்தார். அம்மாவும்தான். என்னால் தான் அவனைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. வேதனைதான் என்னைப் பிடித்துத் தின்கிறது.

கண்ணாடி பார்க்காமலே என் முகம் எனக்குத் தன் கோலத்தை உணர்த்தியது. மலேரியா வராமலே நான், ஒடுங்கிப்போனேன். கூர்மையான அவன் பார்வை கிடைக்காமல் நான் சக்தி வற்றி ஒடுங்கினேன்.

பிறிதொருநாள் மணலாற்றுப் பக்கம் அதிக ஷெல் விழுந்து கொண்டிருந்த நேரம்.

புன்னகை சிந்தும் தன் தோழர்களோடு அவன் வாகனம் ஒன்றில் போவதைக் கண்டதாக தம்பி சொன்னான்.

★

www.tamilarangam.net

# நதிமூலம்

பனை வடலிகளும் ஈச்சமரங்களும் பற்றைச் செடிகொடிகளோடு பின்னிப்போயிருந்த காட்டுவழி அது. இரண்டு பூனைக்குட்டிகள் அந்தப் பாதையோரத்தில். காலைச் சூரியனின் ஒளிக் கீற்றுகள் அவற்றின் எலும்பு முடக்குகளில் பட்டு சிதறிப்பிரகாசிக்கின்றன. அந்த வெறுமை வெளியின் நீர்த்தடாகங்களாக வசீகரிக்கும் அவற்றின் கண்கள் மனிதரைத் தேடின.

'சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக்காட்டினிலே நில்லென்று சொல்லி'ப் பெண்ணைக் கைவிட்டுப்போன மனிதனுக்கு பூனைக்குட்டிகளை அந்த வெளியில் கைவிட்டுப் போன செயல் அப்படியொன்றும் வியப்புக்குரியதல்ல எனப் பூனைக்குட்டிகள் அறியவில்லை. தாயின் மடிச்சூட்டோடு உறங்கிப் போகின்ற சுகம் பனை வடலி நிழலில் கிடைக்கவில்லை. அத்தோடு பசி. வால்களைக் கிளப்பி மூச்சுப்பிடித்து 'மியாவ், மியாவ்' என்ற குரல்கள் அந்த வெளியில் அவலமாய் கீச்சலிட்டன. அந்த வழியால் போன எந்த மனிதனின் கால்களையும் அந்தக் குரல்களால் தரித்து வைக்க முடியவில்லை. காற்றோடு வீணாகக் கலந்து கொண்டிருந்தன குரல்கள்.

❑ ❑ ❑

அந்த வழியால் சிறுவன் ஒருவன் வந்து கொண்டிருக்கிறான். வாரிவிடப்படாத தலை வறுமை இருளில் ஒளியைப் பறிகொடுத்த முகம். பொத்தான்கள் இல்லாத சேட் காற்றில் படபடத்தது. கையொன்றில் தடியுடனும், மறு கையில் கிழிந்துபோன பிளாஸ்ரிக் பையுடனும் வீசிவீசி நடந்து கொண்டிருந்தான். வாயிலிருந்து பாடலொன்று முணுமுணுப்பாக வெளியேற வேக நடையோடு வந்தவனது பாதங்கள் பூனைக்குட்டிகளருகே தரித்தன. பூனைக்குட்டிகளுக்கு அந்த இளம் பாதங்கள் நம்பிக்கையூட்டின. அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்து வரம் வேண்டின. அவனின் கண்கள் பூனைக் குட்டிகளில் நிலைத்திருந்தன. குந்தியிருந்து சுட்டுவிரலால் அவற்றின் நெற்றிப் பொட்டில் மெதுவாகத் தடவிய போது அச்சிறுவனின் முகம் மலர்ந்தது. உதடுகள் சிரிக்கத் தயாராகின. பூனைக்குட்டிகள் நட்புரிமையோடு வேறு தொனியில் மியாவ், மியாவ் எனக் கத்தின. அவன் தனது பையில் இருந்த பாணில் இரண்டு சிறு துண்டுகள் பிய்த்தெடுத்து அவற்றின் முன்பாக வைத்தான். முகர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் கத்தின பூனைக்குட்டிகள். என்ன செய்யலாம்?

பூனைக்குட்டிகளை விரல்களால் பவ்வியமாகத் தூக்கி உடலோடு அணைத்தவாறு நடக்கலானான்.

❑ ❑ ❑

உழைப்பு, உணவு முத்திரை அந்தக் குடும்பத்தின் ஊன்றுகோல்கள். இவற்றைப் பொறித்துவிடும் கணவனின் குடி. அந்தச் சிறிய குடிசைக்குள்தான் அந்தச் சிறுவனின் எண்ணங்களும், மனப்பதிவுகளும் வியாபித்திருந்தன. சிறுவன் பால்மா, சீனி இரண்டையும் பேணியொன்றில் இட்டு கரண்டியால் கலக்கியவாறு அடுப்பில் உள்ள கேத்திலை நோக்கி வருகிறான். சீனி, பால்மா கலவையைக் கரண்டியால் எடுத்து வாயில் போட்டு தலையசைத்து ரசித்தவாறு கேத்தலிலிருந்து சுடுநீரை ஊற்றிக் கலக்கிறான். சிரட்டையொன்றில் பாலைப் பக்குவமாக ஊற்றி நிலத்தில் மணலைக் குழித்து வைக்கிறான். பூனைக்குட்டிகள் ஓசையெழுப்பிக் குடிப்பதைக் கண்ணிமைக்காது பார்க்கிறான் சிறுவன். பால் வடிய நன்றிப் பெருக்கோடு தலை நிமிர்த்தின குட்டிகள். கொடுப்பதினால் உண்டாகும் ஆத்ம சுகம் பற்றி அச் சிறுவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

❑ ❑ ❑

"வசந்தா அக்கா! நான் ரெண்டு பூனைக் குட்டியல்லே வளக்கிறன் வந்து பாரன்'' — என அயல்வீட்டு உறவுக்காரியான வசந்தாவை அழைக்கிறான் சிறுவன். கிடுகு வேலிக் கிறாதியினூடாகக் கன்னம் குழிவிழச் சிரித்தவாறு எட்டிப் பார்க்கிறாள் அவள். வயது பதினைந்தைத் தாண்டியும் சிறுபிள்ளைத்தனமும், குறும்பும் இன்னும் விலகிப் போகாமல் சிட்டாய்ப் பறந்து திரிவாள். கையில் மாங்காயுடன் சிறுவனை நோக்கி வருகிறாள் வசந்தா. மாங்காயை மரத்தில் குத்திப் பிளந்து முதல் துண்டை அவனிடம் கொடுத்து தானும் ஒரு துண்டைக் கடிக்கிறாள். புளியில் வாய் சுழித்துச் சப்பி விழுங்கிய பின் அவசரமாகத் தலையாட்டி கதைத்தாள் வசந்தா.



'நானெடா ரூபன் இண்டைக்கு அம்மன் கோயில் பொங்கலுக்குப் போறன். நீ போகேல்லையே'' எனக் கூறியவாறு பூனைக் குட்டிகளைத் தூக்கிப் பார்க்கிறாள்.

"ரெண்டும் நல்ல வடிவடா தம்பி''.

வெயிலுக்காகத் தலையை மூடிய முந்தானைச் சேலையுடன் உரப்பையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரத்தை இறக்கிவிட்டு, முகத்தின் வியர்வையைத் துடைக்கிறாள் சிறுவனின் தாய். உரப்பையிலிருந்த கச்சான் கடலையைக் கொட்டி அவசர அவசரமாக வறுக்கத் தொடங்கிறாள் அவள்.

"இந்தா ரூபன்! கெதியா வெளிக்கிடு வெள்ளணவாகக் கொண்டு போனாத்தான் கெதியா விக்கலாம்'' என கடலை பாக், வெற்றுச்சரைகள் எனபவற்றைக் கொடுக்கிறாள். சிறுவன் உரைப்பையைத் தோளில் சுமந்தவாறு அம்மன் கோவிலை நோக்கி விரைந்தான்.

❑ ❑ ❑

பொங்கல் திருவிழா கலகலப்படைந்திருந்தது. அந்தக் கிராமத்து மக்களின் வாசனை அந்தக் கோவிலின் வீதிகளெங்கும் நிறைந்திருந்தது. ஐஸ்கிறீம் வாகனத்தின் ஒலிப்பிரவாகத்தினருகே வியாபாரத்தில் மூழ்கியிருந்தான் சிறுவன்.

"அப்பா! அந்தக் கடலைக்காரப் பொடியன் என்னோடை படிக்கிறவன். ரூபன் எண்டு பெயர். நல்ல கெட்டிக்காரன். ஆண்டு ஐஞ்சு புலமைப்பரிசில் பாஸ் பண்ணியும் பள்ளிக்கூடம் ஒழுங்கா வாறேல்லை எண்டு ரீச்சர் நெடுகப் பேசிறவ. அவனுக்கும் ஒரு ஐஸ்கிறீம் வாங்கித் தாறியளே அப்பா'' என்ற மகனின் வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவிக்காது வாங்கிக் கொடுக்கிறார் தந்தை. ரூபன் ஐஸ்கிறீமைப் பெற்றுக்கொள்ள மறுக்கிறான். வற்புறுத்தி அவனிடம் திணித்தபோது கடலைச் சரையொன்றை அவனிடம் கொடுத்து அனுப்புகிறான் சிறுவன். தன்னை நெருங்கிவரும் அக் குடும்பத்தாரைப் பார்க்கிறான் சிறுவன். அவர்களின் செல்வச் செழிப்பின் மினுமினுப்பு அவனை வெகுதூரம் வேறுபடுத்தி வைத்திருந்தது. "ஏன் மோனை பள்ளிக்கூடம் ஒழுங்காப் போறேல்லை. அப்பா என்ன வேலை செய்கிறார்'' என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல் தலை குனிந்துகொள்கிறான் சிறுவன்.

❑ ❑ ❑

"மெக்கானிக் சுந்தரம் தொழிலில் நிபுணர். ஆனால் குடித்தால் ஒன்றுக்குமே உதவாது. மரணக்குடி. குடித்துத் தெருவோரம் ஆனந்த சயனத்திலும் மூழ்குவதுமுண்டு. அன்று அவரின் கைகளுக்கு இரண்டு நூறு ரூபா நோட்டுக்கள் இடம்பெயர்ந்த போது அவரின் சவரம் செய்யாத முகத்தினூடே, வளக்கமாகத் தேக்கி வைத்திருக்கும் இறுகிய சோகத்தையும் மீறி, புன்னகை தோன்றியது. அந்த இருநூறு ரூபாவும் முடியும் வரை மகாராசனாகி விடுவார்.



❑ ❑ ❑

கைப்பிடியிலுள்ள கடதாசிப் பையின் வெளியே விளைமீனின் வால் துருத்திநிற்க இரு மருங்கு வேலிகளையும் தள்ளாடித் தொட்டுத் தடவி, பாதையின் அகலம் திடீரென குறுகிப் போன எண்ணத்துடன் வாசற்படி வந்தடைகிறார் சுந்தரம். மீனை எடுத்து மனைவியிடம் கொடுத்துப் புருவத்தால் கதை பேசினார் அவர். அவளுக்கு இது ஒன்றும் புதுமையானது அல்ல. இப்படி எத்தனை பகல்கள், இரவுகள் வாழ்வின் பிடிப்புகளையும் விரக்திகளையும் உணர்த்தி விட்டுப் போயுள்ளன. அவள் சமைக்கத் தொடங்குகிறாள்.

❑ ❑ ❑

சுந்தரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். பூனைக்குட்டிகள் சுற்றிவளைத்து நின்று, மியாவ் மியாவ் எனக் கத்துகின்றன. மீன் பொரியல் வாசனையில் சுந்தரத்தின் முகம் விகாரமடைகின்றது. கோபத்துடன் எழுந்து பூனைக்குட்டிகளைக் கால்களால் தூக்கி வீசுகிறார். சிறுவன் தூரத்தில் நின்றவாறு கவனிக்கிறான். தகப்பனின் இச்செயல் சிறுவனின் இதயத்தைச் சுண்டி இழுத்திருக்க வேண்டும். தாயை முரட்டுத்தனமாகத் தள்ளி சமையல் சரியாக இல்லையென வாய்க்கு வந்தபடி பேசியதும் அவனுள்ளத்தை மேலும் சிதைத்தது. தந்தை மீது அவனுக்கு அளவில்லா வெறுப்புணர்வு மேலோங்கியது. 'ஏன் இப்படி இரக்கமில்லாதவாறு இருக்கிறார். செத்துத்தொலைந்தாலும் பரவாயில்லை' என்ற எல்லை வரை அச்சிறுவன் உணர்வு ரீதியாகத் தள்ளப்பட்டிருந்தான். பின்புறக் கோடியில் பூனைக்குட்டிகளுக்குச் சாப்பாடு கொண்டுவந்து வைத்தான் சிறுவன்.

❑ ❑ ❑

www.tamilarangam.net

வீட்டில் சிறுவனும் தாயும் மட்டுமே நிற்கிறார்கள். தூரத்தே சைக்கிளில் ஒருவர் வருவதைக் கண்ட தாய் சிறுவனிடம் "அந்தா அதிலே வாற ஆள் வந்து கேட்டா அம்மா எங்கேயோ போட்டா எண்டு சொல்லு'' எனக் கூறிப் பின்புறமாக மறைகிறாள் தாய்.

வீட்டின் முன்பாக 'பெல்' அடிக்கிறது.

"அம்மாவை வரச்சொல்லு''

"அம்மா எங்கேயோ போட்டா''

"என்ன பொய் சொல்லுகிறாய். இப்ப நான் வரேக்கை கதைச்சுச் சத்தம் கேட்டது''.

சிறுவன் தயக்கத்துடன், "இல்லை எங்கேயோ போட்டா'' என மீண்டும் கூறுகிறான்.

"இந்தா காசு கொண்டுவாறன் எண்டு அஞ்சு கிலோ கச்சான் கடலை வாங்கிவந்து போட்டு இப்ப சுத்துமாத்திறியள். நாளைக்கு வாறனாம் எண்டு சொல்லு கொம்மாட்டை''

சிறுவன் படிக்கட்டில் அமர்ந்து வானத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். தாய் வந்து சேரவும் பல்லாயிரம் கேள்விகள் தேங்கிய சிறுவனின் கண்களில் நீர் பனித்திருந்தன.

'ஏன் அம்மா என்னைப் பொய் சொல்லச் சொன்னீங்கள்' என நாதழுதழுக்க அவன் கூறும்போது கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. தாய் மகனை அணைத்துக் கொள்ளுகிறாள். அவனுடைய கோபம் தந்தையத் தேடிச் சென்றது.

❑ ❑ ❑

எரிந்து முடிந்த குடிசை ஒன்றில் இன்னமும் புகை ஓயவில்லை. இராணுவம் அந்தக் கிராமத்துக்கு வந்து போன தடயங்கள். வாகன ரயர் அடையாளங்கள். சப்பாத்துகள் பதித்த சுவடுகள், உடமைகள்தூக்கி வீசப்பட்ட வீடுகள். உடைந்து நொருங்கிப் போன தளபாடங்கள். பற்ற வைத்த வேலிகள். வெட்டிச் சரித்துவிட்ட குலை தள்ளிய வாழைகள். வெடிமருந்துப் புகை நாற்றம்.

சனக்கூட்டம் ஒன்று எங்கோ ஒளிந்து மறைந்து விட்டு அங்கு வந்து சேருகிறது. சிறுவனும் தாயுடன் வந்து சேருகிறான். அவனின் பூனைக்குட்டிகளைக் காணவில்லை. சனக்கூட்டத்தில் பயம், பீதி கலந்த பேச்சுக்கள்,

"சின்னத்துரையற்ற மோள் வசந்தாவையும் காணேல்லையாம்'' எனப் பரபரப்படைகிறது சனக்கூட்டம்.

பனை வடலிப் பக்கமாகச் சற்றுத் தூரம் சென்று பார்க்கிறார்கள். சிறுவனும் பின் தொடர்ந்தான். கால்கள் இழுபட்டுச் சென்ற அடையாளம் நிலத்தில், அதற்கும் அப்பால் வசந்தா அணிந்திருந்த சட்டை கிலமாகக் கிழிந்து பனை மட்டையில் இழுபட்டுக் காற்றில் அசைகிறது. அதற்கும் மேல் ஒரு தடயமும் இல்லை. சிறுவன் வசந்தா அக்காவை நினைத்துக்கொண்டானா? பெண்களின் அவலக்குரல்களுடன் சனக்கூட்டம் திரும்பி வந்தது. சற்று நேரத்தில் இறந்துபோன ஒருவரின் சடலம் கைவண்டியில் வந்து கொண்டிருந்தது. கால்களில் பிடித்து இறக்குகிறார்கள்.

"இது சுந்தரம் அண்ணை''

சிறுவனின் தாய் ஓலமிட்டுத் தலையைச் சுவரில் மோதிக் கொள்கிறாள். மெக்கானிக் சுந்தரம் இறந்த பின்பு எந்தப் பெருமைகளையும் இழக்கவில்லை. ஊரே கூடியிருந்தது. சிறுவனுக்குத் தந்தை மீது இருந்த வெறுப்பான கணங்களெல்லாம் அவர் பாசத்தோடு நடந்து கொண்ட கணங்களால் அடித்துச் செல்லப்பட்டன.

"அப்பா!'' எனத் தந்தையின் கால்களைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழத்தொடங்கினான் சிறுவன்.

❑ ❑ ❑


அதன் பின்பு பல வருடங்களாக அந்தச் சிறுவனை அக்கிராமத்தில் யாருமே காணவில்லை. முல்லைப் படைத்தள அழிப்பைக் காட்டிய வீடியோப் படத்தில் அச்சிறுவனின் சாயலில் ஒரு போராளி கொல்லப்பட்ட இராணுவத்தை பற்றைக்குள்ளிருந்து சரக்கென வெளியே இழுத்தெடுத்து அவனின் துப்பாக்கியை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு அவசர அவசரமாக இராணுவத்தின் ஹோல்சரைக் கத்தியால் வெட்டிக்கொண்டிருந்தான். அந்தச் சிறுவன்தான் இவனாக இருக்குமோ? ★

## "அஞ்சலி!"

அஞ்சலி செய்வது
மௌனம் காப்பது
இவையெல்லாம்
இறந்தவர்களுக்கு!
உங்களுக்கெதற்கு?
நீங்களோ...
என்றென்றும்
எம் நெஞ்சில் உயிர்ப்பவர்கள்!
வான் உள்ளவரை
வாழ்வீர்!
பூமி உள்ளவரை
புன்னகைப்பீர்!
காற்றுள்ளவரை
மூச்சுவாங்குவீர்!
கடல் உள்ளவரை
கையசைப்பீர்!
மண்ணில் விதை ஊன்றி
நீர் ஊற்றினால்
விருட்சமாகும்!
உங்களை
எம் நெஞ்சில் ஊன்றி
கண்ணீர் ஊற்றுகிறோம்!
நிச்சயம்
நாளை முளைத்தெழுவீர்!
வேர் இறக்கி
விழுதெறிவீர்!
மண்ணை நேசித்த
உங்களைப் பார்த்துத்தானே
விடியலை யாசிக்க
நாம் கற்றுக்கொண்டோம்!

- துறையூரான்

www.tamilarangam.net




Printed by Vasan Printers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்